(13)

# முதலமைச்சராக பதவி ஏற்றது சிங்களவர் மீது படை எடுக்கவல்ல

Registered as a Newspaper in Ceylon | வார மலர் ★ ★ | விலை சத 20

# ஈழநாடு

EELA NADU

மலர் 11 | இலக மாசி 13 | ஜுல்கத் 6 | (24-2-69) | திங்கட்கிழமை | இதழ் 14




சிக்கன செலவிற்கு
மில்க் வைற்
பார் சோப்
உபயோகியுங்கள்
மேலுறைகளை சேகரியுங்கள்

# 'பகை வளர்க்க விரும்பவில்லை பயிர் வளர்க்கவே விரும்புகிறோம்

## தி. மு. க. வை எதிர்க்கட்சி தனது பிரசாரத்துக்குப் பயன்படுத்துகிறது'

### யு. என். பி. மகாநாட்டில் பிரதமர் டட்லி

— குளியாப்பிட்டியிலிருந்து நமது நிருபர் பெரி. சுந்தரலிங்கம் —

குளியாப்பிட்டி, திங்கள்

'நாட்டைப் பிளவுபடுத்துவதால் எதுவித முன்னேற்றமும் அடைந்துவிடமுடியாது. இதனால் நாட்டின் முன்னேற்றம் வீணாகத்தடைப்படும். இதனை அறிந்தே தேசிய அரசாங்கம் நாட்டு மக்களிடையே ஐக்கியத்தை வளர்ப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. வைரிகளை நாம் வளர்க்கவில்லை. வீரர்களையே வளர்க்கவிரும்புகின்றோம். பகை வளர்க்க விரும்பவில்லை. பயிர் வளர்க்கவிரும்புகின்றோம்.'

இவ்வாறு பிரதமர் திரு. டட்லி சேனநாயகா நேற்று குளியாப்பிட்டியில் யு.என்.பி. யின் 18-வது வருடாந்த மகாநாட்டில் உரைநிகழ்த்துகையில் கூறினார்.

பிரதமர் திரு. டட்லி மேலும் பேசுகையில் கூறியதாவது:

திருமதி சிறிமா பண்டாரநாயகா நாட்டைப் பிளவு

எதிர்க்கட்சியினர் வைரிகளை வளர்க்கிறார்கள். நாம் வீரர்களை வளர்க்கின்றோம். அவர்கள் பகைவர்களை வளர்த்தார்கள். நாம் பயிர் வளர்த்தோம்.

#### தி. மு. க. வை பயன்படுத்துகிறார்கள்

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பதவிக்கு வந்துவிடலாமென எண்ணி எதிர்க்



## யு. என். பி. யில் சி. பி. டி. சேர்ந்தார்

ஸ்ரீலங்கா சுதந்திர சோஷலிஸக் கட்சியைச் சேர்ந்த திரு. சி. பி. டி. சில்வா நேற்று யு. என். பி. யில் சேர்ந்து கொண்டார். இவரது சகாக்களும் இக்கட்சியில் சேர்ந்து கொண்டனர். இச் செய்தி மகாநாட்டில் அறிவிக்கப்பட்டபோது பெரும் ஆரவார மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டது.

#### தேர்தல்

அடுத்த பொதுத் தேர்தலுக்கு ஆயத்தமாக சகல ஏற்பாடுகளையும் செய்யுமாறு திரு. டட்லி தமது கட்சியினருக்கு வேண்டுகோள் ஒன்றை விடுத்தார்.



விரிவுரையில்

## அண்ணாவை குறிப்பிட்டதாக வாரியா வீட்டில் வன் செயல்

நெய்வேலி, பெப். 23

நெய்வேலியில் திருமுருக கிருபானந்தவாரியார் தங்கியிருந்த வீட்டை இ... ஒரு வன்முறைக்கூட்டம் தாக்கியது. வாரியார் பூஜிக்கும் விக்கிரகங்களையும் சேதப்படுத்திவிட்டது.

## வீண் பீதி வேண்டாம் என்கிறார் கருணாநிதி

சென்னை, பெப். 23

''தமிழக முதல்வர் பொறுப்பை நான் ஏற்று இருப்பது இலங்கையிலுள்ள சிங்கள மக்கள் மீது படையெடுக்க அல்ல, தமிழர்களைத் தூண்டிவிட்டு எங்களுடைய கட்சியை அங்கு பரப்புவதற்காகவுமல்ல'' என்று தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதி கூறினார். தமிழக அமைச்சரவைக்கு அளிக்கப்பட்ட வரவேற்பொன்றுக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

''நீங்கள் முதலமைச்சர் பதவியை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கலைஞரிடம் சொன்னபோது திக்கித்திணறினார். இது பற்றி இரண்டு மணித்தியாலங்கள் விவாதித்தார். பொறுப்பை ஏற்க அவர் செய்த சிரமம் தூய்மையானது. நாட்டு நலனை முன்னிட்டு 4 கோடி மக்களுக்கு வழிகாட்டிக்கப்பலைச் செலுத்தும் மாலுமியாக நியமிக்கப்பட்டு இருக்கிறார் கலைஞர் கருணாநிதி.''

இவ்வாறு சென்னை விஜயா தோட்டத்தில் புதனன்று தென் இந்திய சினிமா ஸ்டுடியோ அதிபர்கள் சங்கச்சார்பில் முதலமைச்சருக்கும் மற்றும் அமைச்சர்களுக்கும் அளிக்கப்பட்ட வரவேற்பில் உரை நிகழ்த்திய தமிழ்நாடு நிதியமைச்சர் மதியழகன் கூறினார்.

முதலமைச்சர் பொறுப்பேற்க திரு. கருணாநிதிக்கு விருப்பமில்லையென்றும், இராஜதந்திரத்தை உபயோகித்து அவர் பதவிக்கு வந்தார் எனச் சிலர் கருதுவது தவறென்றும் திரு. மதியழகன் குறிப்பிட்டார். வரவேற்புபசாரத்துக்கு நன்றி தெரிவித்த முதலமைச்சர் ''என்னை உருவாக்கிய 'முதல்' வரை இழந்த இத்தருணத்தில் இப்பதவியை ஏற்க எனதுள்ளம் விரும்பவில்லை. ஆனால் பொறுப்பு என்மீது திணிக்கப்பட்டுள்ளது. 'திணிப்பை' எதிர்த்துப் போராடிப் பழக்கப்பட்ட நான் இப்பொறுப்பை ஏற்கவேண்டிய கட்டத்துக்கு வந்துள்ளேன்'' எனக் குறிப்பிட்டு மதியழகன் உண்மையைக் கூறிவிட்டார் என்றும், அதைத் தான் கூறினால் நம்புவது கடினம் எனக் கூறினார். கருணாநிதி மேலும் பேசுகையில் ''எனது பதவியையிட்டு இலங்கைப் பத்திரிகைகள் தங்களுக்கேற்ப கருத்து வெளியிட்டுள்ளன. எனது ஆட்சி இலங்கைக்கு ஆபத்தெனவும் தமிழ்ப்படங்களை தமிழ் நாட்டிலிருந்து

## மதுரையில் தம்பிரான் சுவாமிகள்

மதுரை, பெப். 23

நல்லை ஞானசம்பந்தர் ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாதத் தம்பிரான் ஸ்வாமிகளது கதாகாலக்ஷேபத்திற்கு ராமேஸ்வர உற்சவத்தில் பெருந்திரளாக மக்கள் சமுகம் கொடுத்து ரசித்தனர். ஸ்ரீ ராமநாத சேதுபதி மஹாராஜா, ஸ்வாமிகள் கதைக்குக் கடைசிவரை இருந்து சிறப்பித்தார். ஸ்வாமிகளதுகதையைத் தொடர்ந்து மதுரை சோமு அவர்கள் கச்சேரி நடைபெற்றது. இப்போது ஸ்வாமிகள் மதுரை மதனகோபாலஸ்வரகோயில் ஆண்டாள் திருக்கல்யாண மண்டபத்திருப்பணிக்காக நிதிஉதவும் முகமாக 16-3-69வரை ஒரு மாதம் கம்பராமாயண விரிவுரை நிகழ்த்துகின்றார்கள். மதுரை வைகுண்டம் ஐயர் வயலினும் பாலக்காடு கிருஷ்ணையர் மிருதங்கமும் பக்கவாத்தியமாக அமைந்துள்ளனர். 20-3-69 ஸ்வாமியாழ்ப்பாணம் திரும்புவார்கள்.

## சுவாமி அகோரானந்தா முத்தியடைந்தார்

கொழும்பு, திங்கள்

ராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த சுவாமி அகோரானந்தா நேற்று கொழும்பில் சமாதி நிலையடைந்தார். இறுதிக்கிரியைகள் இன்று கனத்தை மயானத்தில் காலை 8-30க்கு நடைபெறும்.

## 40 பேர் மூழ்கினர்

கெய்ரோ, பெப்.23

நைல் நதியில் படகு விபத்தொன்றில் 40 பேர் மூழ்கி விட்டதாக அறிவிக்கப்பட்டது. கடந்த வெள்ளிக்கிழமை இங்கு நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு விட்டுத் திரும்பிக் கொண்டிருந்த 63 பேரில் 40பேர் மூழ்கி விட்டதாகக் கூறப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதமர் திரு. டட்லி மேலும் பேசுகையில் கூறியதாவது:

திருமதி சிறிமா பண்டாரநாயகா நாட்டைப் பிளவுபடுத்தி அதன்மூலம் தாம் பதவிக்குவர முயற்சிக்கிறார். நாம் அவ்விதம் பிளவு மனப்பான்மை கொண்டிருக்கவில்லை. நாட்டைப் பிளவுபடுத்துவதன் மூலம் செம்மையான நல்ல ஆட்சி செலுத்தி விடமுடியாது. இது நாட்டில்வேலையில்லாத் திண்டாட்டத்தையும் அதிகரிக்கச் செய்துவிடும். நாடு முன்னேற இது உதவாது.

எதிர்க்கட்சியினர் வைரிகளை வளர்க்கிறார்கள். நாம் வீரர்களை வளர்க்கின்றோம். அவர்கள் பகைவர்களை வளர்த்தார்கள். நாம் பயிர் வளர்த்தோம்.

### லட்சியம்

இந்த நாட்டில் ஐக்கியம் ஏற்படவேண்டுமென்ற உணர்வுடனேயே எனது தந்தை திரு. டி. எஸ். சேனநாயகா ஐக்கிய தேசியக் கட்சியை ஆரம்பித்தார். இந்த வழியிலேயே நாம் சென்றுகொண்டிருக்கிறோம்.

## தி. மு. க. வை பயன்படுத்துகிறார்கள்

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பதவிக்கு வந்துவிடலாமென எண்ணி எதிர்க்கட்சியினர் வகுப்புவாதத்தைத் தூண்டிவிட முயல்கிறார்கள்.

இப்பொழுது தமது இந்த ரீதியிலான பிரசாரத்துக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தை தேவையற்று இழுத்து தவறான பிரசாரம் செய்கிறார்கள். அவர்கள் எந்த மாதிரிக் கூறிக்கொண்டாலும் நாம் நமது லட்சியப் பாதையில் தொடர்ந்து அமைதியாகச்செல்வோம்.''

இந்த நாட்டின் உணவு உற்பத்தியில் ஊக்கமுடன் உழைத்து வரும் விவசாயிகளுக்கு தாம் தமது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதாகப் பிரதமர் தெரிவித்தார்.

### கல்வி முறையில் மாற்றம் தேவை

கல்வி முறையில் நாட்டுக்கேற்ற வகையில் மாற்றம் தேவையெனத் தெரிவித்த பிரதமர் கல்வி அமைச்சர் கல்வித்துறையில் எடுத்துவரும் நல்ல நடவடிக்கைகளுக்கு தாம் தமது பாராட்டைத் தெரிவிப்பதாகக் கூறினார்.

# ''அண்ணாவை இந்தியாவின் பிரதமராக்கவிரும்பினேன்''

## சட்ட சபையில் ம. பொ. சி.

சென்னை. பெப். 23

''அண்ணா தமிழ்நாட்டின் முதலமைச்சராகி பணியாற்றத் தொடங்கியபோதே இந்தியாவில் தேசிய அரசாங்கம் ஒன்று அமைத்து அதில் அண்ணாவைப் பிரதமராக்க வேண்டுமென்று விரும்பினேன். என் எண்ணம் ஈடேறவில்லை.'' என்று சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞான கிராமணியார் தமிழ்நாடு சட்டசபையில் அமரர் அண்ணா மறைவுக்கு அஞ்சலி செலுத்திப் பேசுகையில் கூறினார்.

அறிஞர் அண்ணாவுக்கு அஞ்சலி தெரிவித்து ம.பொ.சி. தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''தமிழ் இனம்: தமிழ்மொழி தன் தலைமகனை இழந்துவிட்டது. தமிழ்த்தாய் தன் எழுதுகோலினை இழந்து விட்டாள். நாம் மிகச் சிறந்த பேச்சாளரை, அரசியல் வாதியை, எழுத்தாளரை, நல்ல தலைவனை இழந்து விட்டோம். கலைமகளின் வீணையில் இழைந்தநாதம் அறுந்துவிட்டது.

41 ஆண்டுகளாகத் தேர்தலில் போட்டி போடக்கூடாது என்று நினைத்து விரதமிருந்த என்னை விரதத்தை முறிக்கச் செய்து தேர்தலில் போட்டியிடவும் செய்து சட்டமன்றத்திற்குக் கொண்டுவர யார் காரணமாக இருந்தாரோ யாரை நம்பி என் கொள்கையை நிறைவேற்றச் சட்டமன்றம் வந்தேனோ அவருக்குத் துக்கம் தெரிவித்து பேசும் கூட்டத்தில் நானும் கலந்து கொண்டு பேசக்கூடிய இந்த அவலநிலையை அடைந்ததற்காக பெரிதும் வருந்துகிறேன்.

# அண்ணா தமது மனைவிக்கு ஒன்றும் விட்டு செல்லவில்லை

சென்னை, பெப். 23

காலஞ்சென்ற தமிழக முதலமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரையின் மனைவி திருமதி ராணிக்கு மாதாமாதம் அலவன்ஸ் ஒன்று வழங்கப்பட வேண்டுமென தமிழக சட்ட சபையில் எதிர்க்கட்சியினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறு கோரும் பிரேரணையை காங்கிரஸ் கட்சி அங்கத்தவர் திரு. கருத்திருமன் கொண்டுவந்தார்.

இது சம்பந்தமாக அவர் பேசுகையில் திருமதி ராணியை தாமும், திரு. சி. சுப்பிரமணியம், திரு. காமராஜர் ஆகியோரும்சந்தித்த போது திரு. அண்ணாதுரை அவரது மனைவிக்கென ஒன்றையும்விட்டுச்செல்லவில்லை என்பது புலனாகியது என எடுத்துக்கூறினார்.

முதலமைச்சர் திரு. கருணாநிதி இது பற்றி எதிர்க்கட்சியினர் எடுத்துள்ள அக்கறையை வரவேற்பதாகவும் இதுகுறித்து பரிசீலனை செய்வதாகவும் தெரிவித்தார்.



# பாரியா வீட்டில் வன் செயல்

நெய்வேலி, பெப். 23

நெய்வேலியில் திருமுருக கிருபானந்தவாரியார் தங்கியிருந்த வீட்டை இ[illegible] ஒரு வன்முறைக்கூட்டம் தாக்கியது. வாரியார் பூஜிக்கும் விக்கிரகங்களையும் சேதப்படுத்திவிட்டது.

''மனிதஉடல் நிலையற்றது. காலம் முடிந்துவிட்டால், எவ்வளவு சிறந்த டாக்டர்களாயிருந்தாலும் சாகிறவனைப் பிழைக்க வைக்கமுடியாது'' என்று வாரியார் முதல்நாள் திருஞானசம்பந்தரைப் பற்றி விரிவுரையாற்றுகையில் சொன்ன சில வார்த்தைகளே இந்தச் சம்பவத்திற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது.

அறிஞர் அண்ணாவைக் குறிப்பிட்டுத்தான் அவர் இப்படிச் சொன்னதாக கூட்டத்தில் ஒரு சாரார் கருதினார்களாம். இம்மாதிரி ஒரு தப்பபிப்பிராயம் ஏற்பட்டிருப்பதைக்கண்ட வாரியார், தான் எந்தக் குறிப்பிட்டசம்பவத்தையும்குறிப்பிடவில்லையென்றும், யாருடைய உணர்ச்சியாவது புண்பட்டிருந்தால் அதற்காக மன்னிப்புக்கோருவதாயும் கூறினார்.

அடுத்தநாள் சுகயீனம்காரணமாக வாரியார் உரையாற்றவில்லை. இரவு சுமார் 8-30 மணிக்கு 200 இளைஞர் அடங்கிய கூட்டமொன்று வாரியார் தங்கியிருந்த வீட்டைச் சூழ்ந்துகொண்டு ''அண்ணாவைப்பற்றிச் சொன்னதற்காக வருந்துகின்றேன்'' என்று மன்னிப்புக் கோரும் அறிக்கையொன்றில் கையெழுத்துப் போடச் செய்ததாகச் சொல்லப்படுகிறது.

பொலிசார் யோசனையின் பேரில் பெரியார் நெய்வேலியை விட்டுக் கிளம்பிவிட்டார்.

சம்பந்தமாக பொலிசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

பாக். அதிபர் தேர்தல்

# போட்டியிலிருந்து விலக பூட்டோ தெரிவிக்கும் நிபந்தனை

டாக்கா, பெப். 23

கிழக்கு பாகிஸ்தானில் எல்லோரும் ஏற்கக்கூடிய ஒரு வேட்பாளர் தேர்தலில் போட்டியிட முன்வந்தால் தாம் அடுத்த பொதுத்தேர்தலில் போட்டியிடப்போவதில்லையென பாகிஸ்தான் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும், மக்கள்கட்சித் தலைவரும், சமீபத்தில்சிறையிலிருந்து விடுதலை பெற்றவருமான சுல்பிகார் அலி பூட்டோ தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் அதிபர் தேர்தல் அடுத்த வருடம் நடைபெறவிருக்கிறது.

# இந்தி நடிகை மாரடைப்பால் மரணம்

பம்பாய், பெப். 23

பிரபல இந்தி நடிகை மதுபாலா இன்று மாரடைப்பினால் மரணமானார். இவரது மரணம் திரை உலகில் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. இவருக்கு வயது 36.

## கல்விசுவீப்புக்கு எதிர்ப்பு

யாழ்ப்பாணம் திங்கள்

கல்வி சுவீப் டிக்கட்டுக்கு அகில இலங்கை[illegible]தியில் ஆட்சேபம் தெரிவிப்பதுசம்பந்தமாக ஆலோசிப்பதற்கான கூட்டமொன்றுஇன்று மாலை 4 மணிக்கு யாழ். மாநகரசபை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இந்நோக்கத்துக்குஆதரவு கொடுப்பவர்கள் ஆலோசனைகளைக் கூட்டத்தில் கலந்து வழங்குமாறு அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.



நெல் உற்பத்தியோடு சம்பந்தப்பட்ட பல்வேறுபட்ட பிரச்னைகளை ஆராயவென ''இம்பீரியல் கெமிக்கல் இன்டஸ்றீஸ் லிமிடெட்'' [பிரிட்டன்] ஒழுங்குசெய்த மகாநாடு சென்றவாரம் இலங்கையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

பெப்ரவரி 18ந்தேதியிலிருந்து நான்கு நாட்களுக்கு கொழும்பு தப்ரபேன் ஹோட்டலில் நடைபெற்ற இம்மகாநாட்டில் இந்தியா, யப்பான், மலாயா, தாய்லாந்து, பிலிப்பைன்தீவுகள், பிரிட்டன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இம் மகாநாட்டில் ஆராயப்பட்ட பல்வேறு விஷயங்களில் 'கிரமக்ஸோனை நெற்பயிருக்குப் பயன்படுத்துவது பற்றியும் முக்கியமாய ஆராயப்பட்டது. இம் மகாநாட்டுக்கு இந்திய பிரதிநிதியாகிய டாக்டர் உவாட்ஸ் ஸ்பாட்விக் எம். பி. இ. தலைமை தாங்கினர். இலங்கைப் பிரதிநிதியாக திரு. கூல்மேயர் கலந்து கொண்டார்.

# காங்கிரஸ் தலைவர் கருத்து

பெங்களூர், பெப். 23

மொழிவாரியாக ராஜ்யங்கள் பலப்படுவதூதவர வேற்று தேவையானல் ஒற்றை அரசு முறையைக் கோரலாமென அகில இந்திய காங்கிரஸ் தலைவர் திரு. நிஜலிங்கப்பா கருத்து வெளியிட்டார்.

பம்பாய் சிவசேனை கலவரத்துக்கு யார் பொறுப்பானவர் என்பதைக் கண்டறிவதற்கு நீதிவிசாரணை நடத்தப்படவேண்டுமென்றும் அவர் கூறினார்.

பேசுகையில் ''எனது பதவியையிட்டு இலங்கைப் பத்திரிகைகள் தங்களுக்கேற்ப கருத்து வெளியிட்டுள்ளன. எனதமைச்சு இலங்கைக்கு ஆபத்தெனவும்தமிழ்ப்படங்களை தமிழ் நாட்டிலிருந்து இலங்கை பெற்றுக் கொள்வது ஆபத்தெனவும் கருத்து வெளியிட்டுள்ளதாக அறிந்தேன். இந்தப் புதிய பொறுப்பை நான் ஏற்று இருப்பது சிங்களமக்கள் மீது படையெடுக்கவும், தமிழர்களை தூண்டிவிட்டு எங்கள் கட்சிக்கு அங்கு ஆதரவுதேடவுமல்ல எனத் தெரிவிக்கிறேன்'' என குறிப்பிட்டார்.

[illegible] ளிக்கிமை இங்கு நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு விட்டுத் திரும்பிக் கொண்டிருந்த 63 பேரில் 40பேர் மூழ்கிவிட்டதாகக் கூறப்பட்டது.

## திறப்புக் கோர்வை யாருடையது?

கொக்குவிலைச் சேர்ந்த திரு. கே. நல்லையா என்பவரால் நாச்சிமார் கோவிலடியில் கண்டெடுக்கப்பட்ட திறப்புக் கோர்வை ஒன்று 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சிகாட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

# நமது நோக்கு

''பூமியில் இருப்பதைக் காட்டிலும் சந்திரனில் தீமைகள் அதிகமா''?

அப்பலோ விண்வெளிக் கப்பலில் சந்திரனை சுற்றி வந்த அமெரிக்கா விண்வெளி வீரரில் ஒருவரான கர்னல் பிராங்க் பார்மனை வத்திக்கானிலுள்ள குருமாரில் ஒருவர் இவ்விதம் கேட்டதற்கு ''மிகவும் வறண்டு அச்சுறுத்தும் அளவுக்கு சந்திரன் தென்பட்டாலும் பூமியில்தான் பாவங்கள் அதிகம் என்று நினைக்கிறேன்'' என்று பதிலளித்துள்ளார்.

சந்திரனைப்பற்றி நம்மில் பலரையும் விட நேரில் சென்று பார்த்துள்ள கர்னல் பார்மனுக்கு அதிகம் தெரிந்திருக்க வேண்டும். அங்கு மனிதர் யாரும் இருப்பதாக இதுவரை தெரியவில்லை. மனிதர் இல்லாத இடத்தில் பாவம் புண்ணியம் இரண்டும் எப்படி இருக்க முடியும்?

பூமியிலுள்ள கஷ்டங்களையெல்லாம் பார்க்கும்போது சந்திரனுக்குச் சென்று அங்கே வாழ்வது நல்லது என்று தோன்றுகிறதா?'' என்று மற்றொரு பாதிரியார் கேட்டதற்கு, ''இதை நான் ஒப்புக்கொள்ளவில்லை. நான் பூமிக்குத் திரும்பியதைப் பற்றி மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்'' என்றாராம். பூமியில் எவ்வளவுதான் பாவங்களிருப்பினும், அவர் இங்கேயே திரும்பிவந்துவிட ஆவல் கொண்டகாரணமென்ன?

மனிதர் இல்லாத ஒரு இடத்திலே வசிக்க சாதாரணமாக எந்த மனிதனுக்குத்தான் விருப்பமிருக்கும்?

மனிதன் எவ்வளவுதான் கெட்டுப்போய் பாவம் செய்தாலும், அவனுக்குள்ளும் ஒரு தெய்வீக ஒளியுண்டு. எந்தச் சமயத்திலும்அவனது உள் ஒளியே அவனைத் திருத்தி மிக உயர்ந்தவனாக்கிவிடக் கூடும். அருணகிரிநாதர் முதலிய பலரது வாழ்க்கையும் இதற்குச் சான்றாகும்.

நம்மில் பலரும் பல பல பாவங்களைச் செய்கிறோம். மனதாலும். வாயாலும், உடலாலும் செய்யும் பாவங்கள் கொஞ்சமன்று. தான் செய்த தீவினைகள் தன்னையே வருத்துகின்றன. நல்ல புத்திவருகிறது, நல்லவனாக ஆகிவிடுகிறான். மனிதன் எவ்வளவு பாவம் செய்திருப்பினும் அவனுக்கு விமோசனம் உண்டென்பது உறுதி. உள்ளிருக்கும் கடவுளின் எல்லையற்ற கருணையும் சக்தியுமே இந்த நம்பிக்கைக்கு ஆதாரமாகும். கடையவனுக்கும் கடைத்தேற்றமுண்டென்பது ஆன்றோரின் உறுதி மொழி.

எல்லா உயிரிலும் இறைவன் இருப்பதை உணர்ந்தவர்கள் யாரையும் பாவி என்றோ, கெட்டவனென்றோ வெறுத்து ஒதுக்குவரா? இதற்கு மாறாக எல்லாரிடமும் அன்பு காட்டி பேரானந்தமடைவரல்லவா? இந்த இன்பத்தை மனிதப்பூண்டே இல்லாத வேறு இடங்களில் எப்படிப் பெறமுடியும்? மனிதன் எவ்வளவுதான் கேடு செய்தாலும் மனிதனைப் போன்ற ஓர் அற்புத சிருஷ்டிக்கு வேறெதுவும் இணையுண்டா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெண்மணி கற்பிக்கும் பாடம்

# "உலகிலுள்ள நிலமனைத்தும் உலகநாதன் உடைமையே"

## பசித்தோர் அனைவருக்கும் உணவளிக்க உத்தரவாத ஏற்பாடு

## அன்பு வழியே தமிழரின் பண்பு வழி

ஸ்ரீ ஜயபிரகாஷ் நாராயண் சமீபத்தில் இலங்கை வந்திருந்தபோது, பூமிதானத்தைப்பற்றி விளக்கினார். மகாத்மா காந்தி நூற்றுண்டு ஜயந்திவிழா முடிவதற்குள்ளாக தமிழக மனைத்தையும் ராஜ்ய தானமாகக் கொடுக்க முயற்சிகள் நடப்பதாகத் தெரிவித்தார். பூமிதானமானது, கிராம தானம், தாலூக்கா தானம், மாவட்டதானம் இப்படி விரிந்து இப்போது ராஜ்ய தானமாக வளர்ந்துள்ளதாகவும் பீகார் ராஜ்யத்தையே தானமாக அளிக்க இருப்பதாகவும் அறிவித்ததுடன் இந்தத் தானத்தைப் பற்றி விளக்கிப் பேசினார்.

யாழ்ப்பாணத்திலே அவரது பேச்சைக் கேட்டபின் தமிழகத்திலே இந்தத் தானம் எப்படி நடக்கிறதென்பதையும் தானமாக வழங்கப்பட்ட ஒரு கிராமம் எப்படி இருக்கிறதென்பதையும் அறியவும் எனக்கு அதிக ஆவல் ஏற்பட்டது. தஞ்சாவூரிலே 'சர்வோதய' பத்திரிகை ஆசிரியர் ராமஸ்வாமி அவர்களிடம் இந்த என் விருப்பத்தைத் தெரிவித்தபோது திருவாரூரில் நடக்கும் கூட்டத்திற்கு தமிழக பூமிதான இயக்கத் தலைவரான ஜகந்நாதன் அவர்கள் வருவதாகவும் அவரைக் கேட்டு அறியலாமென்றும் சொன்னார். திருவாரூரில் அன்று கூட்டம் முடிந்ததும் ஜகந்நாதன் அவர்களை இதைப் பற்றிக் கேட்டு தானமான ஒரு கிராமத்தைப் பார்க்க விரும்புவதாகச் சொன்னேன் மதுரைக்கு வர முடியுமா? என்று கேட்டார். இலங்கைக்கு அவசரமாகத் திரும்ப நேரிட்டதால் இம்முறை மதுரை செல்ல முடியவில்லை. அதனால் அவ்வித கிராமத்தை நேரில் பார்

களின் ஆதரவை அதிகம் பெற முடியாமலிருப்பதற்கும் என்ன காரணம்? இந்தியா வில் மேற்குவங்காளம், கேரளம் முதலிய ராஜ்யங்களில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஆதரவு அதிகரித்து வருவதன் காரணமென்ன? மக்களின் உணவுப்பிரச்னைதானா? தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோமென்றார் மகாகவி பாரதியார். இந்தியாவில் எவ்வளவோ பேர் உணவில்லாமல் தவிப்பதால்தான் அங்கு கம்யூனிஸமும் பலாத்கார கிளர்ச்சிகளும் தலைதூக்குகின்றனவா? உணவுப் பிரச்னை, வேலையில்லாப் பிரச்னை முதலியவற்றைத் தீர்க்க கம்யூனிஸம்தான் ஒரே வழியா? அல்லது அகிம்ஸாவழி ஏதுமுண்டா? முதலியன மிக முக்கிய கேள்விகள்.




மனிதன் உயிர் வாழ காற்று எப்படி இலவசமாகக் கிடைக்கிறதோ, தண்ணீர் எப்படி அவசியமோ, அதே போல உணவும் அவசியமென்றும், அதுவும் இலவசமாகக் கிடைக்கவேண்டும் என்றும் ஆசார்ய விநோபாஜி கூறுகிறார். உணவு என்பதற்கு பதில் நிலம் அவசியமென்று தமிழகத்தில் ஒரன்பர் தெரிவித்தார். நிலம் யாருக்கு உரிமை என்பதைவிட, நிலத்தில் விளையும் நெல், மக்கள் யாரும் பட்டினியால் வாடாமல் பசியாறச் சாப்பிடப் பயன்படுமாறு செய்யவேண்டியதே அதிக முக்கியம். "உலகிலுள்ள நிலமனைத்தும்

னின் அடிப்படைப்பண்பு. பிறர் பசியையாற்றுவதற்கே விவசாயிகள் நிலம் பயிரிடுவர் தாய்மார்கள் இதே நோக்கத்துடன் அரிசியை உலையில் போடுவர். ஒருவருக்குப் பசியாற்றினால் பெரும்புண்ணியமென்றுபல கதைகளுமுண்டு. அன்ன தானப்பண்பை மறந்து, அன்னத்தை விலையாக்கும் ஓட்டல் முறைதான் அதிகரித்துள்ளது. அதுவும் இருக்கட்டும். பசித்தவருக்கு அவர் பரம ஏழையாயினும், ஏதோ உணவுண்டு என்று ஆங்காங்கேயுள்ள கோயில்கள் மூலம் ஏற்பாடு செய்ய முடியாதா? காசுள்ளவர்களுக்குத்தான் சாப்பாடா? ஏழைகளுக்கு வாழ உரிமையா?

தஞ்சாவூரில் பெரிய கோயில் எனும் புகழ்பெற்ற பிரகதீஸ்வரர் கோயிலுக்கு சுமார் 3000 ஏக்கர்நிலத்தை ராஜராஜசோழன் மான்யமாக விட்டிருந்தாலும். அதில் ஒரு லட்சத்து 60ஆயிரம் கலம் நெல் விளையுமென்றும், அது கோவில் மூலம் சமூக சேவைக்குப் பயன்பட்டதென்றும், அந்த நிலங்களை காணவில்லையென்றும், அதை யார் அனுபவிக்கிறார்கள் என்பதை துப்புச் சொன்னால், மீண்டும் அவற்றைப் பிடுங்கி சாமிக்கே கொடுப்போமென்றும், திரு. நெடுஞ்செழியன், அறநிலைப் பாதுகாப்பு அமைச்சராக இருக்கையில் ஸ்ரீரங்கத்தில் ஒரு கூட்டத்தில் பகிரங்கமாகச் சொன்னார். தஞ்சை கோவில் மட்டுமல்ல, தமிழகத்திலுள்ள பல கோவில்களுக்கும் சொந்தமான நிலங்களை பிறர் அனுபவிக்கிறார்கள். திருவிளக்கு எரிக்க எண்ணெய் கிடையாது. பூசகருக்குச் சம்பளம் கொடுக்கப் பணமில்லை. நிவேதனத்துக்கு அரிசி இல்லை. கோவில்

கம்யூனிஸ நாடுகளில் நிலமெல்லாம் அரசாங்கத்துக்கே சொந்தம். பலாத்காரத்தால் இவ்விதம் செய்துள்ளனர். அரசுகள் மாறலாம்; ஆனால் ஆலயங்களும் அங்குள்ள ஸ்வாமியும் மாறுமா? அன்பு மூலம் நிலமனைத்தையும் கோவில் உடைமையாகமீண்டும்மாற்றமுடியாதா? மிராசுதார்களோ நிலத்தை வைத்துக் கொண்டு, பலவிதங்களிலும் அவதிப்படுகிறார்கள். எல்லாருக்கும் அவரவர்களின் உணவுத்தேவைக்குத் தக்க நெல்லைப் பகிர்ந்தளித்து, நில உடைமையைக் கோவில்களுக்கே அளிப்பதாயின், எல்லாரும் கோவிலுக்காக அவரவர்களுக்குத் தக்க முறையில் உழைக்க வேண்டுமென்றும், கோவில்களைச் சமூகபொதுவுடைமையாக்கி, ஊர் மக்களே நடத்தவேண்டுமென்றும் செய்யப்படாதா? தானமாகியுள்ள ஒரு சில கிராமங்களிலாவது இப்படி பரீட்சார்த்தமாகச் செய்யப்படாதா?

வேலையில்லாக் கஷ்டத்தைப்பற்றிச் சங்கடப்படுகிறோம். ஏன்? வேலையில்லாவிட்டால் உணவில்லை; பட்டினி, சாவுதான். இந்த நிலையை மாற்றி, தேவைப்பட்ட யாருக்கும் உணவுண்டு என்று செய்துவிட்டால், வேலையில்லாப் பிரச்னையால் ஏற்படும் சங்கடங்கள் வெகுவாகக் குறைந்துவிடாவா? உணவை இலவசமாக அளிப்பதாயின், சோம்பேறித்தனம் பெருகி யாரும் வேலை செய்யமாட்ட[illegible]களென்று வாதிக்கப்பட[illegible]ம். ஆனால் மனிதன் உணவால் மட்டும் வாழுவதில்லை. மற்றும் எவ்வளவோ [illegible] படியும் [illegible] கு[illegible]ன் உணவுண்டு என்ற

## கம்பர் கவி விருந்து—5

# ரிஸ்யஸ்ருங்கர்

வசிஷ்டர் திரிகாலம் உணர்ந்தவர். ஞான திருஷ்டியால்யாவற்றையும்நோக்கினார்; ஆகவே புத்திரசந்தானமில்லாத தசரதன் குருவைநாடிய போது, **ரிஸ்யஸ் ருங்கர்** என்னும் **கலைக்கோட்டு முனிவரைக்**கொண்டு புத்திரகாமேஷ்டியாகம் செய்யும்படி கூறினார்.

**கா**ஸ்யபரின் வம்சத்தில் விபண்டகர் என்னும் மஹரிஷி, கழுத்தளவு ஜலத்தில் நின்று கடுமையான தவம் செய்தார். தவத்தைக் கலைக்க ரம்பை, மேனகை முதலியோர் மஹரிஷிமுன் ஸ்ருங்கார லீலைகள் புரிந்தனர். தவம் கலைந்த போது, ஜலத்தில் ரேதஸ்விழுந்தது. அவ்விடம் வந்த ஒரு பெண்மான் ரேதஸுடன் ஜலத்தைக் குடித்தது. அம் மான் மூலம் ஆண்குழந்தை உதித்தது. மான் கொம்புடன் கூடியகுழந்தையாய் உதித்தபடியால், "ரிஸ்யஸ்ருங்கர்" என்றுபெயர் உண்டாயிற்று. **ரிஸ்யம்** என்றால் **மான்; ஸ்ருங்கம்** என்றால் **கொம்பு**. தலையில் கொம்பினுடைய சின்னம் தான். மானும், சாதாரண மானல்ல. ரம்பை என்பவளே, மஹரிஷியின் தவத்தைக் கலைத்துவிட்டோமே மஹரிஷி சபித்துவிடுவாரோ என்ற பயத்தால் மான் வடிவு எடுத்து வந்தனள். ரிஸ்யஸ்ருங்கர் தந்தையாருக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தார். பிரமச்சர்ய விரதத்துடன் மஹா தபசியாக விளங்கினார். அதே சமயம் அங்கதேசாதிபதியாகிய ரோமபாதனுடைய ஆட்சியில் நாட்டில் மழையின்மையால் வரட்சியுண்டாயிற்று. பன்னிரண்டு ஆண்டு மழையில்லை. அவ்வமயம் சில பெரியோர்கள் அரசனே! விபண்டகரின் மகன் ரிஸ்யஸ்ருங்கர் என்றுஒருவர் உளர். அவர் பாதத்தில் சக்ரரேகை உண்டு; அந்தப் பாதம் பட்ட மாத்திர[illegible]தில் உன் நாட்டில் மழை [illegible]ாழியும். அவரைத் தருவிப்பது கஷ்டம். எப்படியாவது வந்தாரோ, நிச்சயம் மழை உண்டு" என்றார்கள்.

மன்னன் நன்கு [illegible]லா

புதல்வன் **ரிஸ்யஸ்ருங்கர்** எனும் தபோதனர் உளர்; மஹா வைராக்கிய சாலி. பிரமசரிய விரதம் தவறாதவர். விபண்டகரோ தன் தவம் பெண்களால் கலைக்கப்பட்டதுபோல் தன் புதல்வனது தவமும் பாழாகக் கூடாது எனத் தன் மகனை மிகவும் கவனமாகப் பாதுகாத்து வருகின்றனர். ஆகவே, நீவிர் ஜாக்கிரதையுடன், விபண்டகர் இல்லாத வேளை அவரிடம் செல்ல வேண்டும்" என்று கூறி "எப்படியும் அவரை அழைத்து வாருங்கள்" என்று அனுப்பினன். அவ்வண்ணம் போனவர்கள் அரசன்கூறியபடி விபண்டகர் இல்லாத நேரம் பார்த்து ஆசிரமம் புகுந்தனர். இதுவரை தந்

மேகம் கறுத்தது என்று கூறுகின்ற கம்பர், ஆலகால விஷத்தின்பின் வந்த அமிர்தம் போல் மழை பொழிந்தது என்று சொல்லாமல் சொல்லுகின்றார். ஆம். பன்னிரண்டு வருட வரட்சியாகிய ஆலகாலவிடம் நீங்கி மழையாகிய அமிர்ததாரை வந்தது. ரோமபாதன் அவரை எதிர்கொண்டு சாந்தப்படுத்தித் தன் மகள் சாந்தையையும் திருமணம் செய்து வைத்தான்- இந்த ரோமபாதன் தசரதனின் உற்ற நண்பன்.

ஆகவே சக்கரவர்த்தி தசரதர் தன் நண்பன் மூலம் தன் குறைதீர ரிஸ்யஸ்ருங்கரை அழைத்து வந்து புத்ரகாமேஷ்டியை செய்ய ஆரம்பித்தான்.

வேறு உருவம் எடுக்க சாத்தியம் உள்ளது. இந்த மாயைக்குச் **சத்வம், ரஜஸ், தமம்** என்ற மூன்று குணங்கள் உண்டு. அவைகளில் தமோகுணம் வெள்ளிப்பாத்திரமாகவும், ரஜோகுணம் தங்கப்பாத்திரமாகவும், சத்வகுணம் திவ்யபாயஸமாகவும் பரிணமித்திருக்கின்றது. அக்கினியில் தோன்றிய புருஷன் **ஹிரண்ய கர்ப்பன்** என்று கூறப்படும் சகுணப் பிரம்மம். அக்கினியிலிருந்து புறப்பட்ட புருஷன், சக்கரவர்த்தியின் கரத்திலே பாயஸபாத்திரத்தைக் கொடுத்து, 'மன்னனே, இந்தப் பாயஸத்தை உன் பத்தினிகட்குக்கொடு எல்லா நலன்களும் அடைவாய்' எனக் கூறி அக்கினியில்

### இராமாயண இரசிகமணி

## ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்

### (நல்லை ஆதீன கர்த்தர்)

தையைத்தவிர வேறு மானுடர்களைக் காணாத ரிஸ்யஸ்ருங்கர், இவர்களை யாரோ தேவதைகள் என எண்ணி, எழுந்து, உபசரித்துப் பூஜித்தார். பெண்கள் தாம் கொண்டுவந்த மோதகம் முதலிய தித்திப்பான பண்டங்களை மஹரிஷிக்குக் கொடுக்க அவர் அவையெல்லாம் ஒருவகைக்கனி என நம்பி உட்கொண்டார். உட்கொண்டபின் "இத்தகைய தித்திப்பான கனிகளுடைய மரம் எங்கிருக்கிறது" என்று கேட்டார். பெண்களும் "எம் ஆசிரமத்தில் நிறைய உண்டு; வந்தால் காணலாம்; உண்ணலாம்" என்று மருட்டினர். பால் போன்ற வெள்ளை உள்ளம் படைத்த முனிபுங்கவரும் அவர்களுடன் ஆசிரமம் காணும் ஆவலுடன் புறப்பட்டார். அவர்கள் அவரை அழைத்து அங்கதேசத்தின் எல்லையை அடைய,

வளநகர் முனிவரன் வரு
முன் வானவன்
களனமர் கடுவெனக்
கடுகி வான் மிசை
சளசள என மழைத்

ராவணாதி ராக்ஷஸர்களது கொடுமைகளைத் தாங்காத அமரர்கள் நாராயணனை அடைந்தார்கள். ஸ்ரீமத் நாராயணமூர்த்தி, அவர்கள்முன் கருடன்மீது வந்து தோன்றினார். தேவர்கள் தங்கள் குறைகளைக் கூறினர். பரந்தாமன் அவர்களைப் பார்த்து, "ஹே தேவர்களே! பயம் வேண்டாம், கூடிய சீக்கிரம் உங்கள் கவலை தீர்க்க நாம் அவதாரம் செய்வோம்" என்று கூறி யாரிடம் அவதரிப்பது என்று எண்ணியபோது தான், தசரதன் புத்ரகாமேஷ்டியை மேற்கொண்டான். யாகத்தின் அக்னி வலம் சுழித்து எழுந்தது. அக்கினியிலிருந்து ஒரு மஹா புருஷன் எழுந்தான். தங்கமயமான பாயஸத்துடன் எழுந்தான். நிகரற்ற காந்தியுடையவனாய், மஹா பலசாலியாய், நீல மேகவர்ணனாய், சகல ஆபரணமும் பூண்டவனாய் கையிலே வெள்ளியால் ஒரு தட்டும் அதில் தங்கத்தாலான பாத்திரமும், அதுமுழுதும் பாயஸமும் கொண்டு வெளிவந்தான். மஹாவிஷ்ணுவினு

மறைந்தான். இதில் வால்மீகியின் கூற்றுப்படி சக்கரவர்த்தி பாயஸத்தில் சரிபாதியைப் பட்டமஹிஷியாகிய கௌஸல்யையிடம் கொடுத்து, மீதியை இருபாகமாகப்பிரித்துக்கைகேயியிடமும் சுமித்திரையிடமும் கொடுக்க மீண்டும் சிறிதாக மிகுதிகண்டுஅதையும் சுமித்திரையிடம் கொடுத்ததாகக் கூறப்படுகின்றது.

பரந்தாமனுடைய அந்தர்த்யானத்திற்குப் பின் இரண்டு காரியங்கள் முக்கியமாய் ஏற்பட்டன. ஒன்று சக்கரவர்த்திக்கு பாயஸ பாத்திரம் கொடுக்கப்பட்டது. மற்றொன்று ஸ்ருஷ்டி காலத்தில் பிரம்மாவினுடைய கொட்டாவியிலிருந்து (ஜ்ரும்பணம்) உதித்தவர் ஜாம்பவன்கரடிகட்கு ராஜாவானார். தேவேந்திர அம்சமாக வாலியும், சூர்யாம்சமாக சுக்ரீவனும், பிரஹஸ்பதி அம்சமாக தாரனும், குபேரனின் அம்சமாகக் கந்தமாதனனும், விஸ்வகர்மாவின் அம்சமாக நளனும், அஸ்விநி தேவர்களது அம்சமாக மைந்தன் துவிவிதனும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுரைக்கு வர முடியுமா? என்று கேட்டார். இலங்கைக்கு அவசரமாகத் திரும்ப நேரிட்டதால் இம்முறைமதுரை செல்ல முடியவில்லை. அதனுல் அவ்வித கிராமத்தை நேரில் பார்த்து அங்கு எவ்விதம் உள்ளதென்பதை அறிய வாய்ப்பில்லாமல் போயிற்று. இதைப்பற்றி மேலும் விசாரித்ததில் அவ்வளவு திருப்தியான பதில் கிடைக்கவில்லை. தஞ்சாவூர் பக்கத்திலே அவ்விதக் கிராமமொதுவும் இருக்குமென்றும் அதைப் பார்க்கலாமென்ம் ஆவல் கொண்டிருந்தனக்கு ஒருவித ஏமாற்றமாக இருந்தது.

மண் 'ஆசையால்தான் ...லச் சண்டை எல்லாம் ...ற்படுவதாயும், வெண்...ணி உள்ளிட்டு இந்தப் ...ரச்னைகளுக்கெல்லாம் பூமிதான இயக்கம்தான் ஒரு நல்ல தீர்வு காட்டக்கூடியதென்றும் கருதி அதைப் பற்றிய விபரங்களை அறிய மிக ஆவலாக இருந்தது. நிலதானமான கிராமத்திலோ, மாவட்டத்திலோ மக்கள் பசி பட்டினி இல்லாமல் வாழுகின்றார்களா? அன்புடன் பலதர மக்களும் பரஸ்பரம் கூடி ஒத்துழைக்கின்றார்களா? பலாத்கார இயக்கங்கள் மூலமின்றி அகிம்சா முறையிலே காந்தி ...கள் காட்டிய வழியிலே உணவுப் பிரச்னையைத் தீர்த்துக்கொள்ள வழி பிறக்குமா? என்பனவற்றை விபரமாக அறிய முடியவில்லை. ஆனல் தென்னகத்தின் நெற் களஞ்சியம் என்றும் சோழநாடு சோறுடைத்து என்றும் கூறப்படும்தஞ்சாவூர் மாவட்டத்திலே பல ஏழைக் குடும்பங்கள் வெளியில் சொல்ல முடியாமல் பசியால் சங்கடப்படுவதை அறிய முடிந்தது. தானமான கிராமங்களிலும் நிலைமை இப்படியே இருப்பின் பூமிதான இயக்கமும் இப்பிரச்னையை எப்படித் தீர்க்க முடியும் என்ற சந்தேகம் ஏற்பட்டது.

இங்கு நம் இலங்கையிலே பூமிதானம், கிராமதானம் முதலியன இல்லாவிடினும் பசி பட்டினிப் பிரச்னைகள் அதிகமாக இல்லை என்று கூறலாம். இங்கு ஒவ்வொருவருக்கும் வாரத்தில் ஒரு கொத்து ரேஷன் அரிசி இலவசமாகக் கிடைக்கின்றதால் இங்கு பட்டினிப் பிரச்னை வெகுவாக இருக்கத் தேவையில்லை. பசிக்குக் கஞ்சியாவது சாப்பிட்டு உயிர் வாழலாம். இலங்கையிலே கம்யூனிஸம் பரவாமலும், தேர்தலில் அந்தக்கட்சி மக்

நிலம் யாருக்கு உரிமை என்பதைவிட, நிலத்தில் விளையும் நெல், மக்கள் யாரும் பட்டினியால் வாடாமல் பசியாறச் சாப்பிடப் பயன்படுமாறு செய்யவேண்டியதே அதிக முக்கியம். ''உலகிலுள்ள நிலமனைத்தும் உலகநாதன் உடைமையே'' என்ற சர்வோதயகீதம் என் மனதைப் பெரிதும் கவர்ந்தது. இதன்படி ஒருகிராமத்திலுள்ள நிலமெல்லாமோ பெரும்பகுதியோ அங்கு கோவில் கொண்டுள்ள சுவாமிக்கே சொந்தமாக்கப்பட்டால், கோவில்மூலம் தேவைப்பட்டவர்களுக்கெல்லாம் பசியாற்றலாம். அது பிச்சையல்ல. பிரசாதமாகிவிடுகிறது. கம்யூனிஸ நாடுகளில் ''கம்யூன்கள்'' ஏற்படுத்தி அங்கு சமையல் சாப்பாடு கூட்டாஞ்சோறு போல் நடக்கிறது. அது போல் இங்கு கோவில்களே ஏன் 'கம்யூன்களாக' பசித்தவர்களுக்கெல்லாம் கஞ்சியாவது கிடைக்கும்படி செய்ய முடியாதா?

இதைப்பற்றி ஓர் அன்பரிடம் கூறியதும், இந்துக்களல்லாத மற்ற சமயத்தவரின் நிலைமை என்ன என்று கேட்டார். கிராமத்திலுள்ள எல்லா வழிபடு ஸ்தலங்களிலும் இவ்விதமே ஏன்செய்ய முடியாது? மேலும் இந்துக் கோயில்களில் ஹரிஜனங்கள் மட்டுமல்ல, எந்தச்சமயத்தவர் வந்தாலும், சாதிசமய பேதமின்றி எல்லாருக்கும் உணவு முதலியன இலவசமாக அளிப்பதென்று ஏன் செய்யப்படாது? இன்று இந்தியாவிலே சமய சமரசம் அதிகமாகப்பேசப்படுகிறது. இது காரியத்தில் செயற்படவேண்டும். ஏற்கனவே சில நூற்றாண்டுகளுக்கு முன் எல்லாரும் இந்துசமூகத்தையே சேர்ந்திருந்தனர். வேறு காரணங்களாலேயே மதம் மாறினர். கோவில்களில் இவ்வித சமூகசேவைகள் மீண்டும் நடைபெறுமாயின், அன்புமூலம்மக்கள் ஒற்றுமைப்படமுடியாதா?

இந்தியாவில் 20 சதவீத மக்கள் தங்கள் தேவைக்குக் குறைவான உணவு அருந்துவதால் துன்பப்படுவதாயும் 75 சதவிகிதத்தவர் சத்துக் குறைவான ஆகாரம் அருந்துவதால் பல்வேறு வியாதிகளால் பாதிக்கப்படுவதாயும் கனடாவைச் சேர்ந்த டாக்டர்ஓ. கே. பாரிஸ் கூறியதை உலகசுகாதார ஸ்தாபனம் சுட்டிக்காட்டுகிறது. பூமிதானம், சிரமதானம், சௌக்யதானம் என்றுவெகுவாகக் கூறப்படும் இக்காலத்தில், தமிழகத்திலே இவற்றுக்கெல்லாம் அதிமுக்கியமான அன்னதானம் வெகுவாக மறைந்து வருகிறது. அன்னதானம்தான் தமிழ

கும் சொந்தமான நிலங்களை ... பிறர் அனுபவிக்கிறார்கள். திருவிளக்கு எரிக்க எண்ணெய் கிடையாது. பூசகருக்குச் சம்பளம் கொடுக்கப் பணமில்லை. நிவேதனத்துக்கு அரிசி இல்லை. கோவில்கள் பல இடிந்து பாழாகின்றன. பழைய நிலமெல்லாம் மீண்டும் கோவில்களுக்கு அதாவது ஸ்வாமிக்கே உடைமையாக்க முடிந்தால் நிலைமை மேம்படலாமல்லவா?

...டாதென்று வாதிக்கப் படலாம். ஆனல் மனிதன் உணவால் மட்டும் வாழுவதில்லை. மற்றும் எவ்வளவோ தேவையுண்டு. எப்படியும் பணமுள்ளவர்களுக்குத்தான் உணவுண்டு என்ற நிலையை மாற்றி யாரும் பசி பட்டினியால் அவதிப்படாமல் வாழ அன்பு முறையில் ஒழுங்கு செய்யவேண்டும். வெண்மணி விவசாயிகள்

(5-ம் பக்கம் பார்க்க)

...உன் நாட்டில் மழை பொழியும். அவரைத் தருவிப்பது கஷ்டம். எப்படியாவது வந்தாரோ நிச்சயம் மழை உண்டு'' என்றார்கள்.

மன்னன் நன்கு ...லா சித்து, அழகான யுவதிகளை அழைத்து, ''பெண்களே நாட்டின் நலனைக் கருதி ஒன்று கூறக் கேண்மின். நம்நாட்டு எல்லையில் உள்ளவனத்தில் விபண்டக மஹரிஷியுடன் அவரது

அழைத்து அங்கதேசத்தின் எல்லையை அடைய,

வளநகர் முனிவரன் வரு
முன் வானவன்
கடுகி வான் மிசை
களனமர் கடுவெனக்
சளசள என மழைத்
தாரை கான்றன
குளனெடு நதிகள் தங்
குறைகள் தீரவே.

(கம்ப இராமாயணம்)

சிவனுடைய கண்டத்து அடக்கப்பட்ட விஷம்போல்

... பூண்டவனும் கையிலே வெள்ளியால் ஒடு தட்டும் அதில் தங்கத்தாலான பாத்திரமும், அது முழுதும் பாயஸமும் கொண்டு வெளிவந்தான். மஹாவிஷ்ணுவினுடைய யோகமாயையே பாயஸம். யோகமாயை ஈஸ்வரனுடைய இச்சையை அனுசரித்து, எவ்விதம் வேண்டுமானாலும் பரிமளிக்கச் சக்தியுள்ளது. அதாவது முன் உடுவத்தை விட்டு

பதி அம்சமாக தாரனும், குபேரனின் அம்சமாகக் கந்தமாதனனும், விஸ்வகர்மாவின் அம்சமாக நளனும், அஸ்விநி தேவர்களது அம்சமாக மைந்தன் துவிவிதனும், வருணனின் அம்சமாக சுஷேணனும், வாயுவின் அம்சமாக அனுமனும் வானர ரூபிகளாக பின்னுல் ஸ்ரீமத் நாராயணனின் அவதாரத்திற்கு உதவும் முகமாக வானர வீரர்களாய்த்தோன்றினர். புத்திரகாமேஷ்டி முடிந்ததும் ரிஸ்யஸ்ருங்கரும் சாந்தையுடன் அங்க தேசம் சென்றார்.

(தொடரும்)



## 26—2—69 அன்று சுன்னுகம் குமாரசாமிப் புலவர் தினமாகும்

# தமிழறிஞர் போற்றிய பெரும் புலவன்

— அ. பஞ்சாட்சரம் —

குமாரசாமிப்புலவரவர்கள், கல்விமான்களைக் கொண்ட பரம்பரையில் வந்தவர்கள். தமிழ்த தந்த தாமோதரம் பிள்ளையவர்களது ஆசிரியரும், முடிவிலா துறை சுன்னுகத்தான் வழி' என்ற பிரசித்தி பெற்ற பாடலைப் பாடியவருமான சுன்னுகம் முத்துக்குமாரகவிராயரின் தம்பியார் சின்னத்தம்பி அவர்களது மகன் அம்பலவாணபிள்ளையினதும் சிதம்பரம் அம்மையாரினதும் தவப்புதல்வராக 1854-ம் ஆண்டு பிரமாதீச வருடம் தைமாதம் 18-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை அவதரித்தார்கள். 1922-ம் ஆண்டு துன்மதி வருடம் மாசி மாதம் 25-ந் தேதி புதன்கிழமை இரவு (பூர்வ பக்ஷத்தசமி, திருவாதிரை நக்ஷத்திரம்) மூன்றரைமணியளவில் இறைவன் திருவடி நீழலை அடைந்தார்கள். புலவர் அவர்கள், இவ்வுலகில் வாழ்ந்தகாலம் 68 வருஷங்கள் 1 மாதம் 8 நாட்கள் ஆகும்.

ஈழத்தில், ஆறுமுகநாவலர் நீர்வேலிச்சிவசங்கரபண்டிதர், மாயாவாதது மசகோளரி நா. கதிரைவேற்பிள்ளை, உடுப்பிட்டிச் சிவசம்புப்புலவர் முதலானேரும், வடக்கே சாமிநாதையர், பாண்டித்துரைதேவர், திரு. மு. ரா. அருணசலக் கவிராயர், திரு. நாராயண ஐயங்கார், திரு. மு. இராகவையங்கார் போன்ற பிரபலஸ்தர்களும் வாழ்ந்த காலத்திலேயே ஸ்ரீமத் குமாரசாமிப் புலவரவர்களும் வாழ்ந்தார்கள்.

கல்வி வல்லுனர்களான, பூ. முருகேசபண்டித்ர், சு. நாகநாதபண்டிதர் ஆகியோரிடம் கற்கும் வாய்ப்பு புலவர் அவர்களுக்குக் கிடைத்தது. நாவலரின் நன்மதிப்புக்கும் பாத்திரராஞர் புலவரவர்கள். நாவலர் பெருமானின் பிரசங்கங்கள் எங்கெங்கு நடக்குமோ, அங்கங்கெல்லாம் ஸ்ரீமத் குமாரசாமிப்புலரவர்களையும் காணலாம்.

சி. வை. தாமோதரம் பிள்ளையவர்களால் தாபிக்கப்பெற்ற ஏழாலைச்சைவவித்தியாசாலையிலும், நாவலர் பெருமானுல் தாபிக்கப்பெற்ற வண்ணுர் பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், புலவரவர்கள் ஆசிரியராகப் பணிபுரிந்த காலத்தில், புலவரவர்களிடம் ஐயந்திரிபுறக்கற்றுணர்ந்தோர் பலராவர். தெல்லிப்பழைச் சிவானந்தையர், வண்ணுர்பண்ணை மாணிக்கந் தியாகராசபண்டிதர், ஏழாலை வி. தம்பையபிள்ளை, உடுவில் வ. மு. இரத்தினேசுவரஐயர், தென்கோவை ச. கந்தையபிள்ளை, வித்துவசிரோமணி சி. கணேசையர், புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை என்போர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

புலவரவர்கள் 1909-ம் ஆண்டு மதுரைககுச்சென்றபோது மதுரைத் தமிழ்ச் சங்கத்து அக்கிராசனுதிபதியாகிய பொ. பாண்டித்துரை தேவர் அவர்களால் வரவேற்கப்பட்டார்கள். அப்போது, மதுரைத்தமிழ்ச் சங்க வித்துவான்களாகிய மு. ரா. அருணசலக்கவிராயர், திரு. மு. இராகவையங்கார், திரு. நாராயண ஐயங்கார் முதலியோடும் புலவர் அவர்களை வரவேற்று உபசரித்தார்கள்.

ஸ்ரீமத் குமாரசுவாமிப்புலவரவர்கள் பிரசித்திபெற்றிருந்த காலத்தில், திருவாவடுதுறை ஆதீனகர்த்தராக இருந்தவர் ஸ்ரீ அம்பலவாண தேசிகர். தேசிகரவர்கள் புலவரிடத்து மதிப்பும் அன்பும் பூண்டவர். 1909-ம் ஆண்டில், தேசிகரவர்களைத் திருவாவடுதுறை ஆதீனத்திற் சந்திக்கும் வாய்ப்புப் புலவர் அவர்களுக்கு ஏற்பட்டது. ஒருநாள் முழுவதும் இலக்கண இலக்கிய சமயசம்பந்தமான விஷயங்கள் பற்றி உரையாடல்கள் நிகழ்ந்தன.

தேசிகரவர்கள், புலவரவர்களின் கல்வியறிவை மெச்சி, திருவாவடுதுறை ஆதீனத்தின் சார்பில் விலையுயர்ந்த இரு பட்டுப் பீதாம்பரங்களை அளித்துக்கௌரவித்தார்கள். அப்பொழுது புலவர்களுக்கு வயசு ஐம்பத்தைந்து.

புலவரவர்கள் செய்தநூல்களுள் இலக்கண சந்திரிகை, வினைப்பகுபத விளக்கம் போன்றவை மிகவும் பிரசித்தமானவை. புலவரவர்கள் செய்த நூல்கள் இன்னும்பல. பல நூல்களை மொழிபெயர்த்தார்கள். புலவரவர்கள் நூல்களுக்கு அளித்திருந்த சிறப்புப் பாயிரங்கள் பல. சென்னைத் தமிழகராதி வருவதற்கு மூலகாரணமாயிருந்தார்கள்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்கள் 1917ம் ஆண்டு தொடங்கிப் புலவரவர்களது இறுதி மூச்சுவரை புலவரிடம் பாடம் கேட்டவர்.

புலவரவர்களது ஞாபகம் தோன்றும்போதெல்லாம் பண்டிதமணி அவர்கள் சுன்னுகம் ஸ்ரீமத் ச. குமார சுவாமிப் புலவர் என்னுடைய ஆசிரியர். என் தந்தையார் செய்த தவத்திஞல் எனக்கு இந்தப்பயன் சித்தித்தது. 1917ம் ஆண்டு கார்த்திகை மாசந் தொடக்கம் புலவர் பெருமானின் இறுதி மூச்சுவரை அம்மகானை யான் பிரிந்ததில்லை. நிழலைப் போலத் தொடர்ந்தேன். அவரது ஆவி உடலைவிட்டுப் பிரியும்போது அருகிலேயே இருந்தேன். அது நடந்தது ஓர் இரவு. மறுநாள் ஈமக்கிரியை நடந்தது. மயானத்தில் புலவரவர்களின் பூதவுடலுக்குத் தீ மூட்டப்பட்டது.

''செந்தமிழும் ஆரிய
மும் தேர்ந்து வீறித்
தேயமெலாம் சென்றிலகும்
சீர்த்தி ஒன்றே
இந்தநில மிசையிருப்ப
இணையிலாத
எண்ணில்பல கவிதழைத்த
இனிய வாயும்
அந்தமிலாக் கலைகள் பல
எழுதி வைத்த
அம்புயநேர் திருக்கர மும்
அந்தோ! அந்தோ!
இந்தனத்திற் செந்தழலில்
உருகி வீய
யாமிதனைப் பார்த்திருத்
தல் என்னே! என்னே!

என்று என்னை அறியாமலே பாடினேன். அதன்மேல் அழுதுகொண்டு என் இருப்பிடஞ் சென்றேன். அந்தத் தினத்தை என்றும் நான் மறந்ததில்லை' என்பார்கள்.

பண்டிதமணி அவர்கள் கூறுகின்ற- பண்டிதமணி அவர்கள் ஒருபோதும் மறக்காத- மறக்க முடியாத அந்தத் தினம்- அந்தத் தினத்தை ஞாபகஞ் செய்யும் புலவர்களது நினைவு தினம்- சிராார்த்த தினம் எதிர்வரும் 26-2-1969 புதன்கிழமையாகும். திதி நட்சத்திரம், நாள் யாவும் பொருந்திவரும் தினந்தான் (மாசிமாதம், பூர்வ பக்ஷத் தசமி, திருவாதிரை, புதன் கிழமை) எதிர்வரும் புதன் கிழமை.

''துன்மதியின் மாசிமதி
சொல்லுமிரு பானைந்து
தன்மப் புதன்நாள் தசமி
யில் — நன்மைக்
குமார னடிசேர்ந்தான்
குன்றுத சுன்னைக்
குமார சுவாமியெனக் கூறு''

— வ. மூ. இ.

### அறிவும் ஆண்டவனும்

அவ்கார்தொன்மையான நகரம். அங்கு இரு அறிவாளிகள் இருந்தனர். ஒருவரை ஒருவர் இகழ்ந்தனர்; வெறுத்தனர். ஒருவர் தீவிர நாத்திகர். மற்றவர் பரம ஆத்திகர்.

ஒருநாள் இருவரும் அங்காடியில் சந்தித்தார்கள். இறைவன் உள்ளானு, இல்லையா என்பதைக்குறித்து இருவருக்கும் கடும் வாக்குவாதம். சுற்றிலும் அவர்களைப்பற்றிச்செல்வோர். நெடுநேர வாதம். பிறகு இருவரும் பிரிந்தனர்.

நாத்திகர் நேரே ஆலமரத்திற்குச் சென்றார். இறைவனைத் தொழுது, கறைபடிந்த தன் கடந்த கால வாழ்வை மன்னிக்கும்படி மனமுருக வேண்டினர்.

அதே நேரத்தில் தெய்வ நம்பிக்கை கொண்டிருந்த ஆத்திகர் தன்னிடமுள்ள புனித நூல்களையெல்லாம் எரித்துக்கொண்டிருந்தார்.

— கலீல் ஜிப்ரான்.

நன்றி: 'கலைக்குரல்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊனக் குழந்தை

சிறுகதை

செந்தாரகை

என்னைப் பார்த்து உலகம் சிரிக்கின்றதாம்!

சிரிக்கட்டுமே! யாரைப் பார்த்து உலகம் சிரிக்கவில்லை. வாழ்பவர்களைப் பார்த்தும் உலகம் சிரிக்கிறது, வாழ்விலே தாழ்ந்து போகிறவர்களைப் பார்த்தும் சிரிக்கிறது. ஏன் சிரிக்க வேண்டும் என்றும் தெரியாது சிரிக்கிறது. அர்த்தமில்லாத சிரிப்பு! அதற்காக நான் ஏன் கவலைப்படவேண்டும்?

உலகம் சிரித்தால் எனக்கு என்ன? என் மனமே என்னைப் பார்த்துச் சிரிக்கும்பொழுது.

''எத்தனை பெண்கள் என் வாழ்வில் குறுக்கிட்டார்கள். அத்தனையையும் நான் துரும்பாக மதித்தேன். நான் செய்த அலட்சியம் அந்தப் பேதைப் பெண்களின்

என்மனம் கவர்ந்தஅவள்- செல்வம் என்னை அலட்சியப் படுத்துகின்ருளா? என்னுடன் இவ்வளவு காலமும் அவள் பழகியது வெறும் நடிப்பா இன்றேல்அமைதியாகச் சென்ற என் வாழ்க்கையில் தலையிட்ட பெரும் புயலா? தென்றலாக என்னிடம் வந்து புயலாக ஏன் அவள் மாறவேண்டும்?

என்னைக் கண்டவுடன் முல்லைச் சிரிப்பைச் சிந்தி இனிமை ததும்பக் கதைக்கும் அவள், இன்று என்னைக் கண்டும் எனக்கு அருகே நின்றும் என்னுடன் கதைக்கவேண்டுமென்ற ஆவல் அவளுக்கு ஏன் ஏற்படவில்லை? என் கை அவள் தோளை ஸ்பரிசிக்கும்போது கூட அன்புடன் என்னை ஏன் திரும்பிப் பார்க்கவில்லை. நான் பேசப் பேச, விரக்தி மனப்பான்மையுடன் என்னைத் தட்டிக் கழிப்பதுபோல் வெறும் 'உம்' கொட்டினளே தவிர, வாய் திறந்து ஒரு வார்த்தை என்னுடன் அன்பாக அவள் பேசவில்லையே!

மனம் திறந்து கடிதம் எழுதும் அவள், இன்று என் கடிதத்திற்குக்கூடப் பதில் தரவில்லையே. கடிதம்தான் அவள் எழுதவில்லை. நேரமில்லாது இருந்திருக்கலாம், அந்த மனம் கவரும் சிரிப்பு- அது எங்கே? அதற்குக்கூட நேரகாலம் உண்டோ?

செல்வம்...!

என்னை நீ மறக்கலாம். உன் இதயத்திலிருந்தே என்னை விலக்க முயற்சிக்கலாம். உன்னை மறக்க என்னல் முடியுமா?

''என்னையும் உங்களையும் யாரும் பிரிக்க முடியாது.'' என்று ஒன்றுக்குப் பலமுறைகள் எழுதினயே- ஏன் நேரிலும் கூடச் சொன்னயே- அத்தனையும் பொய்யா?

நீ அன்பு வைத்த ஒருவன் உன்னை- உன் அன்பை அலட்சியம் செய்தால் உன் மனம் எவ்வளவு வேதனை அடையும் என்பதனைச் சற்றே சிந்தித்துப்பார்!

என்னைப்பார்த்து நகைக்கின்ருயா? ப்...! உன் நகைப்பிற்கும் நான் இடமாகிவிட்டேனு...? என்னல் இன்று உணர முடிகின்றது.

என் நட்பை- அன்பை விரும்பிய எத்தனையோ பெண்களை நான் உதாசீனம் செய்யும்பொழுது, அவர்கள் அடைந்த மன வேதனையிலும் பார்க்க---

உன் உதாசீனம் என் மனத்தை மாத்திரம் துன்பத்தில் ஆழ்த்தவில்லை. என் மனத்தை செயலிழக்கவுஞ் செய்கிறது. என் அன்பு நிலை

ஏவறை ஒன்று வெளியே வருகின்றது. சீ! சீ! என்ன மணம்! ஒரே நாற்றம்!

நான் சாராயம் குடிக்கும் பொழுது இவ்வளவு மணமாக இருக்கவில்லையே?

மனிதனுடைய உடல் ஓர் அதிசயமான இயந்திரம் தான். என்ன திரவியத்தைத்தான் வயிற்றிலே போட்டாலும் அது குணம் கெட்டு மணம் கெட்டு- சேச்சே எல்லாமே மாறி... என்ன விந்தையோ இது!

ஒரு சங்கதி மனிதனே ஆக்கிய இயந்திரத்தில் இதற்கு நேர்மாருக அமைந்து விடுதல் பேராச்சரியத்தைத் தான் தரவேண்டும். அசுத்தங்களைக்கூட இந்த இயந்திரம் ஜீரணித்து தூய்மையும் அழகும், மணமுமுள்ளதாக மாற்றி விடுகின்றதே! கடவுளையும் மிஞ்சி விட்டானே மனிதன்.

குடித்த சாராயம் வயிற்றைக் குமட்டும் மணத்துடன் வெளிவந்து விட்டது. சிந்தனையிலே ஒரு சிறிய தெளிவு. உடலிலே ஒரு சோர்வு.

முதுகை ஒரு தென்னை மரத்து அடியோடு சாய்த்து கால்களை பூமாதேவியின் மடியின்மீது வைக்கின்றேன்.

''உலகே மாயம் வாழ்வே மாயம்!'' என்று எனக்குப் பாடவரவில்லை.

''உலகம்'' அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. என் உலகம் எல்லாம்... செல்வம்! அந்தச் செல்வம் என்னை ஏமாற்றுவாளா! இல்லை... ஏமாற்றி விட்டாளா?

யார் இந்தச் செல்வம்?

0 0 0

என் சிறுகதை இலக்கியத்திலே ஒரு தேக்கமான காலம். நான் விரல்விட்டு எண்ணக்கூடிய எண்ணிக்கையளவு கதைகள்தான் எழுதியுள்ளேன். என்ருலும் என்னை மற்றவர்கள் தரமான எழுத்தாளன் என்று கணிக்கும்படி எழுதியது என்னவோ உண்மை!

அதன்பின்பு என்னல் எழுதமுடியாத நிலை. எழுதவில்லை. சுந்தோருக்கு பஸ்ஸில் பிரயாணம் செய்து வந்தேன்.

''களுக் களுக்!'' என்ற பெண்களின் சிரிப்பொலி. ஈயத்தைக் காய்ச்சி என் காதுகளில் ஊற்றுவது

பிலே மனதைக் கவரும் சக்தி இல்லை. உயிர் இல்லை நாள்தோறும் சதா கேட்டு அலுத்துப் புளித்துப்போன சாதாரண சிரிப்பு. சிரிக்க வேண்டும் என்பதற்காகச் சிரிக்கும்சிரிப்பு-ஏதோ அவர்கள் சிரிக்கின்ருர்கள். மற்றவர்களும் அதைப் பார்த்து இளிக்கின்ருர்கள்...

அன்ெருருநாள்—

வழமைபோல் பஸ்ஸில் பிரயாணம் செய்துகொண்டிருந்தேன்.

நான் கேட்டது-

''கல கல'' என்ற ஒலி. மெல்லியலார் தம் கைவளையல்கள் சிலசமயம் கிணுகிணுக்குமே, அப்படி.

அந்தச் சிரிப்பொலியிலே தான் எத்தனை கவர்ச்சி!

திரும்பிப் பார்த்தேன். எனக்குப் பின்னல் குழந்தை குட்டிகள் ஒன்றுகூட இல்லையே. அப்படியாயின் அந்த

மழலைக் குழந்தையின் மரகத மணிச்சிரிப்பு எங்கிருந்து வந்தது? அந்தச் சிரிப்பொலி எங்கிருந்து வந்தது என்பதைப் பார்த்தே விடவேண்டுமென்று எனக்கு ஆவல். என் உறங்கிக் கிடந்த ஆத்மாவையே தட்டி எழுப்பி நர்த்தனமாட வைத்த சிரிப்பல்லவா? மீண்டும் அந்தச் சிரிப்பொலி கேட்காதா என்ற ஆதங்கம்!

நானும் திரும்ப- மீண்டும் சிரிப்பொலி கேட்க-

''பதினெட்டு வயதுப் பாவை. அவள் தன் தளிர் உடலைத் தாவணியினல் சுற்றிப் போர்த்துக் கொண்டிருந்தாள். கழுத்திலே ஒரு து[illegible]ச் சங்கிலி. கையிலே ஆ[illegible]கள் கட்டும் கடிகாரம். நீலநிறச் சேலை....''

ஒருகணம் அவள் உண்மையில் தோகை விரித்தாடும் நீல நிற [illegible] றிள்.

சிரித்தவள் அந்தப் பாவைதான்.

ஜலதரங்கம் வாசிப்பது போல் இனிமையாக இருந்தது.

அவளைப் பார்த்தேன்.

அழகான வட்ட வடிவமான முகம். அதிலேசுழன்று அங்குமிங்கும் ஓடும் கயல் விழிகள். அந்தக் கயல்விழிகளிலே துள்ளி விளையாடும் மானின் மருட்சி. கன்னங்கள்-அப்பிள்தான். அந்தச் சின்ன முகத்திற்கு எடுத்து வைத்ததுபோன்ற எள்ளுப் பூ நிகர்த்த நாசி. முத்துப் போன்ற பற்கள்-அவ்வளவு வெண்மை...

அந்த மூடிய தாவணிக்குள்ளிருந்து; இறுகிய ஜாக்கெட்டை முட்டித் தள்ளிக் கொண்டு, வெளியேஎட்டிப் பார்க்க முயற்சிக்கும் இரு சிறு சிட்டுக்களன்ன விம்மும் மார்பகங்கள்...

ஒரு கணத்தில் என் கண்கள் எப்படிச் சுழன்றன. மனம் எப்படி ரசித்தது!

பற்றற்று, ஒருவிதவெறுப்புடன் வாழ்ந்து வந்த, என் வெறும் இதயத்தில், அவள் உருவம் என்அனுமதியையே கேட்காது, குடிகொண்டு விட்டது.

நேரம் கணித்துப் பிரயாணம் செய்யாதநான்,இன்ன பஸ் என்று பார்த்து ஏருத நான்- நேரம் கணிக்கத் தொடங்கினேன்; பஸ்ஸைப் பார்த்து ஏறினேன்.

அடிக்கடி அவளுடன் பிரயாணம் செய்தேன். இல்லை...அவள் பிரயாணம் செய்யும் பஸ்ஸில் எனக்கு இடம் தேடிக்கொண்டேன்.

சிரித்துச் சிரித்து விடை பெற்ற நாம்- பேசிப்பேசி விடைபெற்ருேம்- எவ்வளவு முன்னேற்றம்!

தெருக்களிலும், வீடுகளிலும் சமுதாய சேவையாற்றும் தியாகிகள்(?) இந்த பஸ்ஸுக்குள்ளும் ஊடுருவல் செய்தனர். நன்மைக்காக பரிந்து பேசுவது போலவே பேசி, பிரிவினை முயற்சிகளில் வெற்றி பல கண்ட இவர்கள் முயற்சி, இங்கு எமது விஷயத்தில் மட்டும் படுதோல்வியாயிற்று. அவர்களுடையமுயற்சி விழலுக்கு இறைத்த நீராகஅமைந்தது.

அவளுடைய கடந்த கால வாழ்க்கை...

அது சோகம் நிறைந்தது.

யாரோ அவளுடைய உறவினல் ஏமாற்றப்பட்டவளாம்! அவளுடைய [illegible]ம்பமே ஒரு 'விசர்'க்குடும்பமாம்! அவள் 'சித்தப்பிரமைக்காக' வைத்தியம்செய்யப்பட்டவளாம்! அவளுக்கு வைத்தியம் செய்தவர்- அவளைக் கொண்டுவந்தவர்[illegible]ளுக்குத்தான் 'சித்தப் பிரமை' என்ருராம்!

எனக்கு இவர்கள் சொல்ல வேண்டும்?

யாருக்குத்தான் பைத்தியம் இல்லை? ஒவ்வொருவருக்கும் ஒருவித பைத்தியம் தான். 'உலகம் உருண்டை வடிவமானது' என்று சொல்லியவனைப் பைத்தியக்காரன், என்றனர்! 'தேசிய கீதம்' பாடிய பாரதியார் பைத்தியக்காரனுகக் கருதப்பட்டார்!

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றில் ஒருவித லயிப்பு. அது வரம்பு மீறும்போது- அதீதபற்று ஏற்படும்போது- அவர்கள் தங்களை மறந்து, அதில் ஈடுபாடுகொள்ளுகின்ருர்கள். அதன் முடிவு...... பைத்தியப் பட்டங்கள்! பைத்தியங்கள் மற்றவர்களைப் பைத்தியங்கள் என்று தானே எண்ணும்!

என் செல்வத்திற்கு என்ன பைத்தியமோ?

செல்வத்திற்குப் பைத்தியம் பிடித்ததென்ருல்அதை என்னல் நம்பவே முடியாது. பைத்தியம் அவளைப்பிடிக்க முடியாது. குழந்தைக்கு பைத்தியம் வருவதுண்டா? என் செல்வமும் ஒரு குழந்தைதான்! அவள் எத்தனை பெரிய பெண்ணுக இருந்தாலென்ன?

அவள் உள்ளம் -

அவள் பார்வை -

அவள் சிரிப்பு -

நிச்சயம் அவள் ஒரு குழந்தையே!

அவளுக்குப் பைத்தியம் என்று சொல்கிருர்களே, அவர்களுக்குத்தான் பைத்தியம்.

ஆனல், அவளின் உறவு, அதனல் என் வாழ்வில் ஏற்பட்ட தாக்கம்-சிறுகதை இலக்கியத்திற்கு ஊக்கம்தருவதாக அமைந்தது.

அவள் சிரிப்பு, பார்வை, நடை எல்லாமே கதைகள் பேசும்!

''குமார்! உங்கள்கதைகள் நன்ருக இருக்கின்றன. எழுதியவுடன்முதல் எனக்கு தாருங்கள். என்னைப்பற்றியும் நீங்கள் எழுதலாம். நான் ஒன்றும்கோபிக்கமாட்டேன்...'' என்று கூறி எனது அபிமான ரஸிகையாக- சிறந்த விமர்சகராக-எனக்கு ஊக்கம் தந்தவள், என் செல்வம்.

என் எழுத்திலே இப்பொழுது தனி வேகம்...!

'மேல்நாட்டிலே பெண்கள் நட்பினல் - உறவினல்- ஏற்படும் தாக்கத்தினல்தான் எத்தனையோ கலைஞர்கள் உருவாகினர்கள். உருவாகின்ருர்கள்' என்று என் நண்பன் கூறுவான்.

என் வாழ்வில்-என் செல்வத்தின் நட்பினல் ஏற்பட்ட

---

அண்ணு அஞ்சலி

## இருக்கின்ருர்!

—''அல்வை த. சுந்தரன்''

செங்கதிர் சாய்ந்து போனதுவோ
செகமிது துயரில் ஆனதுவோ
கங்குலின் கோரப் பிடிதனிலே
குற்றுயி ரானது குவலயமோ?

அண்ணு எமைவிட் டிறந்தனனே?
அருமைத் தம்பியை மறந்தனனே?

நுண்மதி மன்னன் நுடங்கினனே?
நானில மண்ணுள் அடங்கினனே
விண்வெளி மதியில்; விரிவொளியில்
வீடமைத் தங்கே உறைந்தனனே?

ஆ! அண் ணுத்துரை இறந்தனனே
அவனியை விட்டேன் மறைந்தனனே?

கண்ணியம் கடமை காய்ந்ததுவோ
காலமும் அதைத்தின் ருேய்ந்ததுவோ
பண்பொளி, பாசம், பணிவன்பும்
பாரிதை நீங்கிச் சாய்ந்ததுவோ?

அன்புத்தீபம் அணைந்ததுவோ?
அல்லலு மெம்மைப் பிணைந்ததுவோ?

செந்தமி ழன்னைத் தலைமகனும்
சீர்மிகு பாரதப் பெருமகனும்
சிந்தனை யாளன்; செயற்கரிய
செயல்வன் மைத்திறன் கொண்டமகன்-

மனிதன் ஒருவன் மடிந்தனனே
மானில வாழ்வைக் கடிந்தனனே?

தாயே தெய்வம்; தூயநறுந்
தமிழே தெய்வம் தான்பிறந்த
தாய்நா டிந்தத் தரணியிலே
தோன்றிய உயிரெல் லாந்தெய்வம்...

தெய்வம் ஒன்றே எனத்துதித்த
தூயவன் எம்மைத் துறந்தனனே?

சீர்மிகு கல்விச் செம்மலவன்
செகத்திற் கினிய தலைவனவன்
வீரத் தமிழன் வேங்கை அவன்
வெஞ்சின மறியாத் தங்கமவன்!

வேங்கையும் சாய்ந்து வீழ்ந்ததுவோ
வெந்துய ரெம்மில் வாழ்ந்ததுவோ?

பாரதஞ் செய்த பாவமெது?
பண்நறுந் தமிழின் பிழைகளெது?
பா,ரதந் தன்னிற் பவனிவரும்
புண்ணிய னண்ணு போவதற்கு?

விழியேன் குருதி வடிக்கிறது
வெந்துயர் நெஞ்சேன் துடிக்கிறது?

பொன்னுடன் எம்மைப் பிரிந்தது காண்!
புன்னகை எம்மைப் பிரிந்ததுகாண்!
மன்னுயிர் இதயப் பூமுகப்பில்
மாண்புடன் அண்ணு இருக்கின்ருர்!

இருக்கின் ருர்அவர் இறக்கவில்லை!
இனியவர், அவரை மறக்கவில்லை!

அவர்புக ழறிந்த இதயமதில்...
அனைத்து உயிரில்; அத மூச்சில்...
தவமாந் தமிழில்; தேன்சுவையில்...
தீங்கவி செய்தே சிரிக்கின்ருர்!

இருக்கின் ருர்அவர் இறக்கவில்லை!
இனியவர் அவரை மறக்கவில்லை!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்கு என்ன? என் மனமே என்னைப் பார்த்துச் சிரிக்கும்பொழுது.

''எத்தனை பெண்கள் என் வாழ்வில் குறுக்கிட்டார்கள். அத்தனையையும் நான் துரும்பாக மதித்தேன். நான் செய்த அலட்சியம் அந்தப் பேதைப் பெண்களின் மனதை எவ்வாறு தாக்கியிருக்கும். இன்றுதான் அதை என்னால் உணரமுடிகிறது.

பெண்களை நான் உதாசீனம் செய்யும்பொழுது, அவர்கள் அடைந்த மன வேதனையிலும் பார்க்க---

உன் உதாசீனம் என் மனத்தை மாத்திரம் துன்பத்தில் ஆழ்த்தவில்லை. என் மனத்தை செயலிழக்கவும் செய்கிறது. என் அன்பு நிலையற்றது என்ற நினைப்பா?

என் அடி வயிற்றிலே ஒரு குமட்டல்- புகைச்சல்...

அதன்பின்பு என்னால் எழுதமுடியாத நிலை. எழுதவில்லை. சுந்தோருக்கு பஸ்ஸில் பிரயாணம் செய்து வந்தேன்.

''களுக் களுக்!'' என்ற பெண்களின் சிரிப்பொலி. ஈயத்தைக் காய்ச்சி என் காதுகளில் ஊற்றுவது போலிருக்கும். அவ்வளவு வெறுப்பு! அவர்கள் சிரிப்

ருந்தாள். கழுத்திலே ஒரு து... சங்கிலி. கையிலே ஆ...கள் கட்டும் கடிகாரம். நீலநிறச் சேலை....''

ஒருகணம் அவள் உண்மையில் தோகை விரித்தாடும் நீல நிற மயில்போல் தோன்றி...ள்.

...த்தவள் அந்தப் பவை தான்.

அவள் மனம் விட்டுச் சிரித்தாள். அவள் சிரிப்பது,

வினால் ஏமாற்றப்பட்டவளாம்! அவளுடைய ...ம்பமே ஒரு 'விசர்'க்குடும்பமாம்! அவள் 'சித்தப்பிரமைக்காக' வைத்தியம்செய்யப்பட்டவளாம்! அவளுக்கு வைத்தியம் செய்தவர்- அவளைக் கொண்டுவந்தவ...ளுக்குத்தான் 'சித்தப் பிரமை' என்றாராம்!

எப்படித்தான் இருந்து தொலையட்டுமே! இதைஏன்

'மேல்நாட்டிலே பெண்கள் நட்பினால் - உறவினால்- ஏற்படும் தாக்கத்தினால்தான் எத்தனையோ கலைஞர்கள் உருவாகினார்கள். உருவாகின்றார்கள்' என்று என் நண்பன் கூறுவான்.

என் வாழ்வில்-என் செல்வத்தின் நட்பினால் ஏற்பட்ட

(5-ம் பக்கம் பார்க்க)

இனியவர், அவரை மறக்கவில்லை!

அவர்புக ழறிந்த இதயமதில்...
அனைத்து உயிரில்; அத மூச்சில்...
தவமாந் தமிழில்; தேன்சுவையில்...
தீங்கவி செய்தே சிரிக்கின்றார்!

இருக்கின் றார்அவர் இறக்கவில்லை!
இனியவர் அவரை மறக்கவில்லை!!


YARL RICE MILL
MANIPAY

# யாழ் அரிசி ஆலை

## தனது வியாபாரிகட்கு வழங்கும்

# ரொக்கப் பரிசுகள்

எமது 'யாழ் அரிசி ஆலை' ஸ்தாபனம் ''யாழ் அரிசி'' விற்பனையாளர்களுக்காக விசேட பரிசுத் திட்டம் ஒன்றினை இதோ! அறிமுகம் செய்து வைக்கிறது!!

### பரிசுகளின் விபரம்-

| | | | | |
|---|---|---|---|---|
| முதலாவது | பரிசு | ரூபா | 1000/- | ரொக்கப்பணம் |
| இரண்டாவது | ,, | ,, | 750/- | ,, |
| மூன்றாவது | ,, | ,, | 500/- | ,, |

சென்ற ஆண்டு 1—9 - 1968 முதல் இவ்வாண்டு 31—8 - 1969 வரையுள்ள ஓர் ஆண்டுக் காலத்தில் 2500 அரிசி மூடைகளுக்கு மேல் விற்பனை செய்யும் ஒவ்வொரு விற்பனையாளர்களுக்கும் முதலாவது பரிசு வழங்கப்படும்.
அதேபோல் இக்கால எல்லைக்குள் 2000 அரிசி மூடைகளுக்குமேல் விற்பனை செய்பவர்களுக்கு இரண்டாவது பரிசு வழங்கப்படும்.
அதே போல் இக்கால எல்லைக்குள் 1750 அரிசி மூடைகளுக்கு மேல் விற்பனை செய்யும் ஒவ்வொரு விற்பனையாளர்களுக்கும் மூன்றாவது பரிசு வழங்கப்படும்.

# யாழ் அரிசி ஆலை

## மானிப்பாய்

தொலைபேசி எண்: 553 மானிப்பாய்.


## உருவகக் கதை

# பூக்கள்

மல்லிகைக் கொடி சிரித்தது!

முற்றத்து மல்லிகைப் பந்தரிலே என்றைக்குமில்லாதவாறு இன்றைக்குப் பூத்துக் கொட்டிக்கிடக்கிறது. அந்த வைகறை வேளையிலே வீட்டின் தலைவி வந்து மல்லிகைப் பூக்களைப் பறித்துக் கொண்டு போகிறாள். இன்னும் சற்று நேரத்திலே அவளுடைய சுருண்ட கார் கூந்தலிலே அவை சரமாகத் தொங்கும், தங்கத்தில் இயன்ற அவளது மென் தோள்களிலும் சரிந்துகிடக்கும். இதை எண்ணியபோது மல்லிகையின் மலர்ச்சி இன்னும் அதிகரிக்கிறது.

மாமரத்தைப் பார்க்கிறபோது மல்லிகைக்கும், கனகாம்பரத்துக்கும் சிரிப்புவருகிறது. மல்லிகைப் பூவைத் தலைவி நீண்டுகிறாள்; வண்டுகள் மொய்க்கின்றன. காண்போர் விரும்புகின்றனர். அதேபோல் கனகாம்பரப் பூவைக் குழந்தை விரும்புகின்றது; நறுமணமும் செந்தேனும் இல்லாவிட்டாலும் அதனுடைய அழகை யாரும் குறைசொல்லிவிட முடியாது.

ஆனால் மாம்பூவுக்கோ அழகுமில்லை, தேனுமில்லை. மொத்தத்தில்மனிதவர்க்கத் இதயங்களிலே, அற்ப ஆனந்தமும் சிறுமை எண்ணமும் கொண்டிருந்து மடிந்துவிட்ட அந்தப் பூக்களைப் பார்க்க, அவ்வச்செடிகளின் மீது அனுதாபம் பூத்தது.

ஆனால், அதேசமயத்தில் மாமரத்தின் முகத்தில் மலர்ந்திருக்கின்ற சிரிப்புக்கும் காரணம் தெரியவில்லை. ஏன் இந்த அடக்கமான, அமைதியான சிரிப்பு? வெள்ளி நிலா பவனிவரத் தொடங்கியது. தமது சந்தேகத்தை அவை கேட்டன.

அதோ, கிணற்றடித் தோட்டத்திலே ஆயிரக் கணக்காக நிறைந்து கிடக்கின்றன கனகாம்பரப் பூக்கள். கனகாம்பரச் செடியின் முகத்திலும் மலர்ச்சி. தங்கச் சிறு ரதமாய் அசைந்து வந்த அந்த வீட்டின் பிஞ்சுக் குழந்தை, அதன் மஞ்சள் வர்ணத்தின் ஆசை மேலீட்டால் ஏற்பட்ட ஆவலோடும் கைகளை நீட்டிப் பறிக்கிறது. தெய்வத்தின் கைகளிலே கிடக்கின்ற நினைப்பு அவைகளுக்கு. கனகாம்பரத்துக்கு மலர்ச்சி இன்னும் மேலோங்குகின்றது.

ஆனால்......

அதோ. சிவந்த ஓடுகளுக்கு மேலாகத் தலை நீட்டி நிற்கின்ற மாமரத்தின் முகத்திலே இத்தனை ஆரவாரமான மலர்ச்சியைக் காணவில்லை, அதன் கொம்புகளிலும்தான் பூக்கள் பூத்துக் கிடக்கின்றன. ஆயினும், அடக்கமான புன்முறுவலைத் தவிர வேறு ஆரவாரத்தைக் காணவில்லை.

தாலும், தேனீ வர்க்கத்தாலும் புறக்கணிக்கப்பட்டுவிட்ட பூ என்பதுமல்லிகையினதும் கனகாம்பரத்தினதும் எண்ணம். அதன் விளைவே அந்தச் சிரிப்பு. மாமரம் அந்தச் சிரிப்புக்களைப் பொருள்செய்யவே இல்லை. பழைய புன்முறுவலுடன் அமைதியாக இருக்கின்றது அது.

## தேவகாந்தன்

அன்றைய காலைமறைந்து மாலைமலர்ந்தது. மல்லிகைப் பூக்கள் முற்றத்திலே கொட்டிக்கிடக்கின்றன. கனகாம்பரப்பூக்கள் வாடி உதிர்ந்துவிட்டன. இவற்றின் இடத்தை நிரப்புவதுபோல விண்ணிலே பூத்த நட்சத்திரப் பூக்கள், இந்தக்காட்சியைக் கண்டன. அவற்றின் வெள்ளி நிலா பதில்கூறியது:-

''பூக்களின் சிறப்பு அவற்றின் மணத்திலோ, நிறைந்துள்ள தேனிலோ, அல்லது கண்கவரும் வனப்பிலோ அல்ல. தாம் நிலையாகி தம்முடைய இனத்தையும் நிலைப்பித்துவிட தாய்மைப் பொலிவுகொள்ளுகின்றனவே, அதிலேதான் தங்கியுள்ளது. மாம்பூவின் அல்லிகள் உதிரலாம். ஆனால், பூ நிலையாக இருந்து காயாகி, கனியாகி, விதையாகி ஒரு மரமாகவே விருத்தியாகிவிடும். பூவுக்கு இதுதான் உண்மையானபெருமையாக இருக்கமுடியும். மாமரத்தின் அடக்கமான மலர்ச்சிக்கு இந்த நினைப்பே காரணமாகும்.''

காரணத்தை அறிந்த வானப்பூக்கள் ஒருமுறை கண்ணைச் சிமிட்டிக்கொண்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகம்

# தீந்தமிழ்த் தீ

## முன்னுரை:

அழகு தமிழ்; பழகு தமிழ்; நமது அன்னைத் தமிழ் அரியணையில் வீற்றிருந்து அவனிக்கே கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்த காலமாம் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் பாண்டி நாட்டை அறநெறி தவரு அரசர்க்கரசனும் பாண்டியன் நெடுஞ்செழியன் ஆண்டுவருகின்றுன். தமிழ்ச்சங்கம் அமைத்துத் தமிழை வளர்த்துவருகின்றுன். தமிழ்ப் புலவர்களைத் தாயின் பரிவோடு ஆதரித்து ஆவன செய்கின்றுன். தமிழ்ச் சங்கத்திலே புலவர்கள் பலர், வானத்திலே நட்சத்திரங்கள் மிளிர்வதைப்போல மிளிர்கின்றனர்.

வானிலே நட்சத்திரங்களுக்கிடையே நடுநாயகமாகத் திகழும் முழுமதியென நக்கீரர் எனும் புலவர் ஒளிர்கிறுர். துருவ நட்சத்திரம் போலக் கபில, பரணர் திகழ்கின்றனர். நக்கீரர் தமிழ்ச் சங்கத் தலைமைப் புலவராக வீற்றிருந்து தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் அணி செய்கின்றுர். அஞ்சா நெஞ்சம் கொண்டவர், அநீதியானவற்றை எதிர்த்துப் போராடத் தயங்காதவர், தண்ணளி மிகுந்தவர். தமிழ் நாடு உய்திட- ஏன் இந்த மாநிலமே உய்திட அன்னுரது உள்ளத்தில் கவிதைப்பூ பூக்கின்றது.

பூவின் அழகும் மணமும் அவனியைக் கவர்கின்றன. காலைக் கதிரவன் நீலத்திரை கடலிலே எழுந்திடும் காட்சியைக் கோல மயில்மீதுவரும் மால் மருகனும் முருகனென இயற்கையில் இறைவனைக்கண்டு களிக்கின்றுர் நக்கீரர்.

கருத்துக் கருவூலமாகக் கவிதைக் காவியமாகத் திகழும் திருமுருகாற்றுப் படையை அவனி புகழ்கின்றது.

நக்கீரரின் வாழ்வின் முற்பகுதியில், அஞ்சா நெஞ்சங் கொண்டவராகத் திகழ்ந்திட்ட நாட்களில் ஒரு நாள்...........

## காட்சி — (1)

(மதுரைத் தமிழ்ச் சங்கம்-

துக்களை வெளியிடப்போகின்றுராம். தங்கள் அனுமதி கோருகின்றுர்.

நக்கீரர்:- யார் அந்த அறிஞன். உடனே அழைத்துவா.

(கொண்டான் வருகிருன்)

கொண்டான்:- செந்நாப் புலவர்களே! எல்லோர்க்கும் என் சிரம் தாழ்த்தி நமஸ்காரம் செய்கிறேன்.

நக்கீரர்:- தங்கள் பெயரென்ன? தமிழ்ச்சங்கத்தை நாடித் தாங்கள் வந்த காரணம் யாது?

கொண்டான்:- யான் தமிழையும் ஆரியமாம் சமஸ்கிருதத்தையும் துறைபோகக் கற்றவன். நீண்டகாலம் ஆழ அகலக் கற்றதனுல் இரு பாஷைகளுக்குமிடையேயுள்ள உயர்வு தாழ்வை உணர்ந்தேன்.

நக்கீரர்:- மொழிகளிலே உயர்வு தாழ்வா? எதுவும் தெளிவாக இல்லையே. சுருங்கச் சொல்லி விளங்கவைத்தால் நன்று.

கொண்டான்:- இரத்தினச் சுருக்கமாகவே சொல்கிறேன். தமிழ்ப்பாஷை தீது. ஆரியமாம் சமஸ்கிருதம் நன்று. இந்த முடிவை இச் சங்கத்திலே மறுத்துவாதாட யாராவது இருக்கிருர்களா?

நக்கீரர்:- தமிழ்தீது. ஆரியம் நன்று. நன்று! நன்று!! தீந்தமிழ் நாட்டிற் பிறந்து

அகப்பொருள்புறப்பொருள் என்னும் பொருள் இலக்கணத்தை தன்னுள் அடக்கியது தொல்காப்பியம். உயிரினும் சிறந்த ஒழுக்கத்தையுடைய மக்களை உயர்திணை என்றும், மற்றைய திணையில்லாத உயிரினங்களை அல்+திணை - அஃறிணை என்றும் வகுத்திருக்கின்றது தொல்காப்பியம். தத்துவரீதியாகவே எழுத்துக்களுக்கு உயிரொழுத்து மெய்யெழுத்து உயிர்மெய்யெழுத்து எனப் பெயர் சூட்டியிருக்கிருர் தொல்காப்பியர். இவற்றையும் இன்னேரன்ன பிறபல சிறப்புக்களையும் உடைய உயர் தனிச் செம்மொழியை, உயர்ந்த பண்பாட்டின் உறைவிடமாகிய செந்தமிழையா தீது என்ருய். தமிழ்ப் பற்றும் தன்மானமுமற்றவர்கள் தமிழர்களென்று எண்ணியா புகுந்தமொழி, புதுமொழி என எண்ணிப் புன்முறுவலுடன் ஏற்றுப் பழையமொழியாம் தீந்தமிழைத் தீது எனக் கூறத் துணிந்தாய். அதுவும்பொய் இருள் கடிந்து மெய்ச்சுடர் கொளுத்தும் அஞ்சாநெஞ்சங்கொண்ட செஞ்சொற் கவிஞர்கள், செந்தண்மையாளர்கள் வீற்றிருக்கும் இந்தச் சங்கத்திலா தமிழ் தீது என எடுத்துரைக்கத் துணிந்தாய் தருக்கனே.

**‘கரவை கிழார்’**

செந்தமிழ்மொழியை ஆராய்ந்ததாகக் கூறும் நீயா தமிழ் தீது என்ற அவசர முடிவுக்கு வந்தாய். தெளிவாகச் சிந்தித்து, நடுநிலை நின்று நிதானமாக ஒரு முடிவுக்கு வர வேண்டும்.

கொண்டான்:- இது அவசரப்பட்டுச் செய்த முடிவல்லப் புலவரே. ஆழ்ந்து சிந்தித்து ஆராய்ந்த பின் செய்துகொண்ட முடிவு. தமிழ்தீது. ஆரியம் நன்று. இந்தச் சங்கச் சபையில்மட்டுமல்ல. இந்தத் தமிழ்நாட்டின் எந்த அவையிலும் இக் கருத்தை எடுத்துச் சொல்வேன். இதை யாரும் தடுத்திட முடியாது.

நக்கீரர்:- ஆரியத்தை நன்று என நீ நவில உனக்கு

கொண்டான்:- ஆம். இந்தச் சங்கத்தில்தான் இக் கருத்தையுரைக்கவேண்டும். சங்கம் ஏற்றுக்கொண்டால் தமிழ்நாடெங்கும் இக்கருத்துப்பரவும்.

நக்கீரர்: வீணுக என் சினத்தை கிளறி விபரீதத்திற்கு ஆளாகாதே. பொய்யான, தவருன கருத்தைச் சங்கச் சபையிலே கூறவந்த உன்னைப் பொறுத்தருளும்படி சங்கப்புலவர்களை யான் வேண்டுகிறேன். இவ்விடத்தைவிட்டு உடனே அகன்றுவிடு. உம். நில்லாதே.

கொண்டான்: மீண்டும் சொல்கிறேன். ஆரியம் நன்று. தமிழ் தீது. இந்த உண்மை தெரியாத உனக்கா தமிழ்ச் சங்கத் தலைமைப்

பரண கபிலரும் வாழி-
அரணிலா
ஆனந்த வேட்கையான்
வேட்கோகுயக்
கொண்டான்
ஆனந்தஞ் சேர்க்க சிவா

(கொண்டான் நிலத்தில் சுருண்டு விழுகிருன். உடனே கபிலரும், பரணரும் நக்கீரரிடம் சென்று)

கபிலர்: அன்புகெழுமிய புலவரேறே! தங்கள் சினம் தணியவேண்டுகின்றேன். கொண்டான் அறியாமையினுற் செய்த பிழையைப் பொறுத்தருளவேண்டும். அவனுக்கு மீண்டும் உயிர்ப் பிச்சை அளிக்கவேண்டும் என இறைஞ்சுகின்றேன் புலவர்பெரும...

பரணர்: ஆம். அதுவே தான்எமதுவேண்டுகோளும்.

நக்கீரர்: (சினம்தணிந்து) அருள் உள்ளம்கொண்ட தமிழன்னை கொண்டானை ஆண்டருள்வாள்.

பாட்டு:

ஆரியநன்று தமிழ்தீது
எனவுரைத்த
காரியத்தால் காலக்கோட்
பாட்டானை-சீரிய
அந்தண்பொதியில்
அகத்திய ஞராணையால்
செந்தமிழே தீர்க்க சிவா

(கொண்டான் உயிர் பெற்று எழுகின்றுன். சிறிது தூரம் நடந்துவிட்டுச் சென்று சபையைப்பார்த்து)

கொண்டான்: உம்..இன்று உங்களுக்கு வெற்றிதான். ஆனல் பிறிதொரு சந்தர்ப்பத்தில் கவனித்துக்கொள்கிறேன்.

## காட்சி (2)

நக்கீரர் இல்லம்- மனைவி கயற்கண்ணி சோகத்துடன் கணவனின் வரவை எதிர்பார்த்து ஏங்கியிருக்கிருள். நக்கீரர் வருகின்றுர்.

கயல்கண்ணி:- எனது ஆருயிர்த் தலைவ! தங்கள் வரவை எதிர்பார்த்து ஏங்கி ஏங்கி கண்கள் குளமாகி விட்டன. இன்று ஏன் இவ்வளவு தாமதம்? ஒரு நாழி கழிவது ஒரு யுகம் போவது போல் தெரியுது.

நக்கீரர்:- கயல்கண்ணி! அயலவரும் உற்ருரும் உறவினரும் உவகை கொள்ள உய்வு தரும், ஒளியுமிழும் உனது முகத்தில் இருள் படர்ந்த காரணம் என்ன?

கயல்கண்ணி:- தமிழ்ச் சங்கத்தில் தமிழைத் தீதெனப் பழித்து தங்களையும் எதிர்த்து வாதிட்டானுமே ஒரு தருக்கன்.

நக்கீரர்:- ... தமிழை ... தும் ஏசியவன் எரிந்தான் தமிழ்த்தீயால். தமிழின்

# மனை கட்டி மாட்சியுடன் வாழ சில ஆலோசனைகள்

(முன்தொடர்ச்சி)

வீடுகட்டும்போது சோதிட சாஸ்திர முறைப்படி அவரவர் சாதகங்களைப் பார்த்துஇன்னவாசல்இன்ன இராசி இவர்கட்கு வீடு கட்ட நன்மைக்குரியதென்பதை ஆராய்ந்து எடுத்துக் கொள்ள வேண்டும். சோதிடர்களின் கவனம் சாதகமில்லாவிடின் ஆருடமோ, நிர்ணயமான அட்டஅவதானப்படி நிச்சயித்தல் முதல்காரியமாக உளது. கிணறு அமைப்பும் சமையல் கட்டும் வளம் பிசகாது சாஸ்திர அமைப்பில் வேண்டும். மேலும் காணி வடிவம் வீடு கட்டும் பூமியின் வேலி அளவு வடிவங்களை ஆராய்ந்து பார்க்கும் போது காணியின் வடிவம் வேலி அமைப்புக்கள்.

கத்திரிக்கோல் போலும் மூன்று மூலை முக்கோணமாயும் நேத்திரம்போலும் மத்தளம் போலும் உள்ள பூமி வடிவம் வீட்டுக்கு ஆகாது. உப்பு சவர்நிலத்திலும் தண்ணீர் ஓடும் வளவாகியநிலத்திலும் பார்வைக்கு அழகில்லாத நிலத்திலும் புற்று இருந்த நிலத்திலும் சுடு

காட்டுக்கு அருகாமையில் உள்ள நிலத்திலும் ஆடு கட்டியோ வளர்த்தோ வந்த நிலத்திலும் வீடுகட்டல் ஆகாது. கிழக்கு மேற்கு அகலம் குறைந்த நிலத்திலும் கட்டலாகாது.

இந்தப் பூமியை ஒரு சாண் வரை வெட்டி ஒரு பிடி மண்ணை எடுக்கவும். எடுத்து மூக்கினுல் நுகர்ந்து மணத்தைச் சோதிக்கும்போது அந்த வாசனையானது புலால் நாற்றம், இரத்த நாற்றம், பிணநாற்றம், எண்ணெய்ஞல்

பூமி வணிகர்கட்கு மேற்கு வாசல் வீடுகட்ட உத்தமம்.

உயர்ந்தும் பலவித வர்ண நிறமும் மனதுக்குப்பிரியமானதும் நாவுக்கு ருசியும், நல்ல வாசனையும் பொருந்திய பூமியானது கமம் செய்வோர் தானியங்கள் சேமிப்போர் சகலருக்கும்அன்னம் இடுவோர் பசு சம்ரட்சணை செய்வோர்கட்கும் கிழக்கு வாசல்வீடு கட்ட உத்தமமானதாகும்.

பூமியை ஆராய்ந்துதேர்ந்தெடுத்து இன்ன வீடு கட்டி பொருந்துமென்று

ஆயர்பாடி சோதிடர்
— வே. த. மயில்வாகனம் —

சக்குநாற்றம் இருக்குமாகில் அதில் வீடுகட்டலாகாது. தாமரைப்பூ வாசனை, வெளுத்த பூமி, சிவந்த பூமி பிராமணர்கட்கும் சிங்க இராசிக்கு வடக்கு வாசல் வீடும் உத்தமம்.

சிவந்தபூமி அல்லதுபச்சை கருமேகம் போன்ற பூமியும் துவர்ப்புள்ளபூமியும்தெற்கு வாசல் வீடுகட்ட உத்தமம். பச்சையும் களித்தன்மையும் புளித்த ருசியும் உள்ள

கண்டுகொள்ள வேண்டும். அதன் பிரகாரம் அளவு செய்து இராசி வகுத்து வீட்டுக்கு நிருதி மூலையில் முளை அடித்து அதிலிருந்தே மறு அளவுகளை ஆரம்பிக்கவேண்டியது முக்கியமாகும். இதன் பிரதானம் வாசல் வளங்களே. இன்னஇன்ன மாதம் வாசல் வளம் இவையாகும் தன்மை.

தான் முன்னிருந்த வீட்டுக்கும் கட்டிவாழவைக்கும் புதுமனைக்கும் உரிய திக்குப் பொருத்த விபரமாவது: நீங்கள் இருந்த வீட்டிலிருந்து தெற்கிலிருந்து வடக்குத் திசைக்கு வீடு கட்டினுல் நன்மை. உங்கள் தெற்குத் திசை யோனியானதுசிங்கம். வடக்கேயுள்ள யோனியானை. வெற்றி, சுபம், நல்வாழ்வு, ஐஸ்வரியம் உண்டாம். தெற்கிலிருந்து வடக்குத்திசையில் வீடுகட்டவும்.

நீங்கள்வசிக்குமிடத்திற்கு வடக்கும் கிழக்கும்வடகிழக்கும் வீடு கட்ட நலம். இதில் மேற்குத்திசைக்கும் வடமேற்குக்கும் மத்திம திசைபலன் உண்டு. ஆகையால் முன்னிருந்தஇடத்தையும் வீடுகட்ட இருக்கும் திசையையுங்கவனிக்கவேண்டியது அவசியம்.

கிழக்கு-இந்திரன், இந்திர பதவி, உத்தமத்தில் உத்தமம், வடகிழக்கு-ஈசான்யம், பிர்மகுருபதவி, உத்தமத்தில் மத்திமம். வடக்கு-குபேரன், ஐஸ்வர்யபதவி, உத்தமத்தில் உத்தமம், வடமேற்கு, வாயுஞானயோக பதவி, மத்திபத்தில் உத்தமம். மேற்கு-வருணன் பாத விமோசனபதவி, மத்திபத்தில் உத்தமம்.

# நட்சத்திரத் திருடர்கள்!

ஈழத்து நவீனன்

நட்சத்திரங்களிடமும் நட்சத்திரங்களின் வீடுகளிலும் கைவரிசையைக் காட்டி ‘நட்சத்திரத் திருடர்கள்’ என்ஞெரு பெயரைப் பெற்றுக்கொள்வதில் ஒரு சில பேருக்கு ஆசையோ என்னவோ! சமீபத்திய நடைபெற்றிருக்கும் பல திருட்டுக் கேசுகளைப் புரட்டிப்பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தபோது இந்த

உண்மை துலாம்பரமாகத் தெரிந்தது. பாவம் பல நட்சத்திரங்கள் திருடர்களின் பெயர்களோடு சம்பந்தப்பட்டு தங்கள் சொந்தப் பொருட்களையும் இழந்திருக்கும் செய்தி கொட்டை எழுத்தில் பல பத்திரிகைகளில் பிரசுரமாகியிருக்கின்றது.

குட்டி பத்மினியிலிருந்து இந்த விஷயத்தை விவரிக்கலாமென்று நினைக்கிறேன்.

அவள் பறிகொடுத்தது என்ன தெரியுமா? அவளுடைய அருமையான நாய்! திருடிக்கொண்டு போனவர்கள் குட்டி பத்மினியின் சந்தோஷத்தையும் திருடிக் கொண்டுபோய்விட்டார்கள்

### அதிர்ஷ்டத்துக்குரியவர் விஜயகுமாரி

தனி வீட்டில் தியாகராஜ நகரில் இருக்கும் விஜயகுமாரி அடுத்த பரிதாபத்துக்குரிய ஆசாமி! அவர் வேலைக்கமர்த்தியிருந்த ரகமத்கனி என்ற முஸ்லிம் பெண், விஜயகுமாரி வீட்டுப் பீரோவைக் கள்ளச்சாவி போட்டுத் திறந்து 35 பவுண் எடையுள்ள 3 தங்கச் சங்கிலிகளைத் திருடிக்கொண்டு பறந்துவிட்டாள். அவற்றின் மதிப்பு சுமார் 5000 ரூபாய்!

என்ருலும் திருடியவளுக்கு அதிர்ஷ்டம் முழுக்கவும் துணை செய்யவில்லை. சிதம்ப

மேகலா
தயாரித்து
தரு...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்கீரரின் வாழ்வின் முற்பகுதியில், அஞ்சா நெஞ்சங் கொண்டவராகத் திகழ்ந்திட்ட நாட்களில் ஒரு நாள்............

## காட்சி — (1)

(மதுரைத் தமிழ்ச் சங்கம்-சங்கப் பலகையில் நக்கீரர்-கபிலர்-பரணர் முதலிய புலவர்கள் வீற்றிருக்கின்றனர். நெடுஞ்செழியனும் உடன் வீற்றிருக்கிருன்.)

நக்கீரர்:- சங்கப் புலவர்களே! உங்களனைவருக்கும் எனது அன்பு கனிந்த பணிவான வணக்கம். புலவர்களாகிய நாம் நாற்பத்தொன்பதின்மர் அடங்கிய இந்நானிலம் போற்றும் தமிழ்ச் சங்கத்தின் தலைமைப் புலவனாய் இருந்திடும் பெரும் பேற்றினை எனக்களித்து, தமிழ் மொழி செழித்தோங்கி அதன் மணம் தரணியெங்கும் கமழ, வழிவகை வகுத்திடும் தண்டமிழ் நாடாம் பாண்டி நாட்டு மன்னன் நெடுஞ்செழியன் நீடு வாழ்க என வாழ்த்துவோம்.

நெடுஞ்செழியன்:- தூய அன்பு உணர்வாம் பாலை தங்கத் தமிழ்க்கிண்ணமாம் கவிதையில் தந்து சிந்தையை மகிழ்விக்கும் கவிஞர் பெருமக்களைப் பாராட்டுகின்றேன்.

(காவலன் வருகின்றுன்)

காவலன்:- வேந்தர்க்கு வேந்தே தலைமைத் தமிழ்ப் புலவ வணக்கம்!

நக்கீரர்:- ஏது செய்தி? வாயிலில் யாராவது காத்திருக்கிறார்களா?

காவலன்:-ஆம் கவியரசே, கொண்டான் எனும் பெயருடையார் இங்கே தங்கள் திருமுன் நின்று சில கருத்தை எடுத்துச் சொல்வேன். இதை யாரும் தடுத்திட முடியாது.

நக்கீரர்:- ஆரியத்தை நன்று என நீ நவில உனக்கு உரிமையுண்டு; உனது ஆசை அதுவானுல், ஆனுல் தமிழ் தீது என்று சொல்ல உனக்கு உரிமையில்லை; அது உண்மையுமல்ல. தட்டிக் கேட்க ஆள் இல்லை என்று இங்கே சண்டப்பிரசண்டம் செய்ய வந்தாய்? தமிழ் மண்ணில் பிறந்து, தமிழன்னையின் மடியிலே, அன்புக் கரங்களிலே தவழ்ந்து. அவள் உதிரத்தை ஊட்டமாகக் கொண்டு வளர்ந்த நீயா தமிழ் தீது என்கின்றுய். சிறுமதி கொண்டு, சீலத்தை யிழந்து, சிறுநரியாகாதே.

கொண்டான்: சீற்றம் கொள்ளவேண்டாம் புலவரே! வியாகரணம் எனும் நூலை நீர் படித்ததுண்டோ?

நக்கீரர்: வடமொழியாம் ஆரிய இலக்கண நூலான வியாகரணத்தை யாம் படித்திருக்கிறோம். விழுமிய கருத்துக்களை இழு மென்மொழியால் எடுத்தியம்பும் தமிழ் இலக்கணமாம் தொல்காப்பியத்தை நீர்கற்கவில்லையா? அதிலுள்ள சிறப்பு என்ன என்பது உமக்குப்புரிந்ததா?

கொண்டான்: தொல்காப்பியத்தில் சிறப்பாக என்ன இருக்கின்றது. வியாகரணத்தைப்போன்ற இலக்கண நூல்தானே அதுவும்.

நக்கீரர்: நீ கூறிய இந்தக் கூற்றே உனது அறியாமையையும் வஞ்சக எண்ணத்தையும் எடுத்துக்காட்டுகிறது. உலகிலுள்ள வேறு எந்த மொழிக்கு இல்லாத படி சங்கப்புலவர்களை யான் வேண்டுகிறேன். இவ்விடத்தைவிட்டு உடனே அகன்றுவிடு. உம். நில்லாதே.

கொண்டான்: மீண்டும் சொல்கிறேன். ஆரியம் நன்று. தமிழ் தீது. இந்த உண்மை தெரியாத உனக்கா தமிழ்ச் சங்கத் தலைமைப் பீடத்தைத் தந்தார்கள்.

கபிலர்: நெறிதவறிப் பேசாதே. ''குணம்என்னும் குன்றேறி நின்றார் வெகுளி கணமேயும் காத்தல்அரிது'' என்ற பொய்யாமொழியை நினைவுபடுத்திக்கொள்.

பரணர்: ஆம். தீந்தமிழ் தீயானுல் உன்னைத் தீய்த்து விடும்.

கொண்டான்: உங்கள் அறிவுரையை யான் இங்கே கேட்கத்தயாரில்லை. ஆரியம் தேவபாஷை. தமிழ் மனித பாஷை. தமிழ் தீது, ஆரியம் நன்று என்ற முடிவை ஏற்றுக்கொள்கிறீர்களா? இல்லையா?

நெடுஞ்செழியன்: தமிழைப்பழித்த உன்னைத்தண்டித்திருப்பேன், எனது அரசவையில் இப்படி அட்டகாசம் செய்திருந்தாயானுல். அருள்நெஞ்சம்கொண்ட புலவர்களிடம் நிதானமாகப் பேசவேண்டும். நீ நிற்குமிடம் பாண்டிநாட்டுத்தமிழ்ச் சங்கம் என்பதை மறந்து விடாதே.

நக்கீரர்: தமிழைப்பழித்த தருக்கனே! தண்மை நிறைந்த தமிழ்மொழி பொங்கியெழுந்தால்எரிமலையென வெடித்துத் தணலைக் கக்கித் தீந்தமிழ்த்தீ உன்னைத் தீய்த்துவிடும்.

பாட்டு:

முரணில் பொதியில் முதற்
புத்தேள் வாழி

படர்ந்த காரணம் என்ன?

கயல்கண்ணி:- தமிழ்ச் சங்கத்தில் தமிழைத் தீதெனப் பழித்து தங்களையும் எதிர்த்து வாதிட்டானுமே ஒரு தருக்கன்.

நக்கீரர்:- ஆம் அன்பே! தமிழை இழித்தும் பழித்தும் ஏசியவன் எரிந்தான் தமிழ்த்தீயால். தமிழின் வன்மை தெரியாததனுல் குற்றம் புரிந்தவன் திருந்துவான்; ஒறுக்கக்கூடாது. அவனுக்கு உய்வு தரவேண்டும் என்ற அருள் நிறைந்த தண்டமிழால் மீண்டும் உயிர் பெற்றெழுந்தான். இனித் திருந்தி விடுவான். அதற்காக நீயேன் கலங்க வேண்டும்?

கயற்கண்ணி.- தங்கள் அருள் நெஞ்சம் இன்னு செய்தவனைப் பொறுத்து இனிது செய்து மகிழ்ந்தது. ஆனுல் உயிர் பெற்ற அந்தக் கயவன் தனிப்பட்ட ஒருவன்தானே என எண்ணி விடக்கூடாது.

நக்கீரர்:- ஏது கயற்கண்ணி! கவிஞனின் மனைவிக்கு கற்பனை எட்டாத உயரத்திற்குப் பறக்கிறது போலிருக்கிறதே. வீணுகக் கலங்காதே. கற்பனை ஆழ்ந்த துயரத்தைத் தரும்,

கயற்கண்ணி:- யான் எண்ணுவதில் சிறிது கற்பனை கலந்திருக்கலாம். ஆனுல் முழுவதுங் கற்பனை அல்ல. தமிழையும் தமிழ் மண்ணையும் அழித்து ஒழித்திட எண்ணி திட்டமிட்டுச் செயலாற்றும் ஒரு சதிகாரக் கும்பலின் ஏவுகணைதான் தங்களை எதிர்த்து வாதிட்ட அந்தத் தருக்கன் தங்களுக்கு ஏதும் ஊறு விளைவித்து விடுவானே என் நெஞ்சம் அஞ்சிகிறது.

நக்கீரர்:- கொஞ்சிடும் வஞ்சி நீ அஞ்சுவது இயல்புதான். ஆனுல் கொஞ்சு தமிழ்க் கவிஞனும் நக்கீரனின் இல்லக் கிழத்தியாகிய நீ அஞ்சலாமா?

கயற்கண்ணி:-தங்களுக்கிருக்கும் திண்ணிய, தெளிந்த நெஞ்சம் எனக்கு எப்படியிருக்க முடியும்? தாங்கள் மட்டும் வஞ்சத்தையும் சதியையும் எதிர்த்து வெற்றி காணமுடியுமா?

நக்கீரர்:- உயர்வும் சிறப்பும் வாய்ந்த மொழியாம் தமிழை, ஒழித்திட தீட்டப்பட்ட சதியினுல் வருங்காலத்தில் விளையக் கூடியவற்றைத் தீர்க்கதரிசனக் கண்கொண்டு காண்பவன், எதிர்க்காது எதிர்த்துச் சதியைச் சாடாது எப்படி வாளாவிருக்க முடியும். கொடுமை கண்டு பொங்கியெழும் நெஞ்சம் கவிஞனுக்கு மட்டும் உள்ள தனி இயல்பல்லவா? சரியானது நீதியானது என எண்ணிவிட்டால் அதற்கென உயிரை

(5-ம் ...)


# தம்பி அன் கோ.,

284, K. K. S ரேட், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்

நிரந்தர சேமிப்புக்கு கீழ் குறித்த வட்டி கொடுக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1 வருடத்திற்கு | — | வருடம் 8 சத வீதம் |
| 2 வருடத்திற்கு | — | வருடம் 9 சத வீதம் |
| 3 வருடத்திற்கு | — | வருடம் 10 சத வீதம் |

மேற்குறித்த நிரந்தர சேமிப்பை எப்பொழுதும் 30 நாள் அறிவித்தலில் வருடம் 8 சத வீத வட்டியுடன் எடுக்கலாம்.

இந்த மாதிரி 10 விளம்பரம் தருபவர்க்கு ஒரு சுவீப் ரிக்கற் இனமாகக் கொடுக்கப்படும்.


மேகலா தயாரித்து தரும்

## கலை அரங்கம்

வைக் கள்ளச்சாவி போட்டுத் திறந்து 35 பவுண் எடையுள்ள 3 தங்கச் சங்கிலிகளைத் திருடிக்கொண்டு பறந்துவிட்டாள். அவற்றின் மதிப்பு சுமார் 5000 ரூபாய்!

என்றாலும் திருடியவளுக்கு அதிர்ஷ்டம் முழுக்கவும் துணை செய்யவில்லை. சிதம்பரத்தில் வைத்து தன் கண

(5-ம் பக்கம் பார்க்க)

# டைரக்டர் சாமியே கலைஞர் மு. க. வை சினிமா உலகில் நுழைத்தார்

உறங்கிக் கொண்டிருந்த சினிமா உலகம் விழிக்க ஆரம்பித்தது. அப்போது ஜூபிட்டர் பிக்சர்ஸில் இருந்த டைரக்டர் ஏ. எஸ். ஏ. சாமி, கருணாநிதியை அழைத்து, சினிமா உலகில் புகுத்தினர். கருணாநிதியின் ராஜகுமாரி என்ற நாடகத்தைத் திரைப்படமாக எடுப்பதற்கு ஜூபிட்டர் பிக்சர்ஸ் ஒப்புக்கொண்டதோடு மட்டுமல்லாமல், அபிமன்யு என்ற புராணப் படத்துக்கும் வசனம் எழுதித்தரும்படி வற்புறுத்தினர். பகுத்தறிவிற்குக் களங்கம் ஏற்படாதவகையில் சில நாட்டில் பரப்பச்செய்தது. பெண்கள் சமுதாயத்தின் சீர்கேடுகளைக்களைந்து, ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமமாக வாழவேண்டும் என்பதை வலியுறுத்தி தேவகி, மணமகள் ஆகிய இரு படங்களுக்கும் வசனம் எழுதினர். அதன்பின்தான் சினிமா உலகில் ஒரு திருப்

பராசக்தி வசனங்களை, எத்தனையோ இளைஞர்கள் மனப்பாடம் செய்துவைத்திருந்தார்கள். அவ்வளவு சீக்கிரத்தில் அவரது வசனங்கள், வாலிபர் மனதில்இடம் பெற்றுவிட்டன. தமிழ் நாட்டைப்பற்றி 'பராசக்தி' யில் இப்படி அவர் வசனம் எழுதியிருக்கிறார்: 'சிங்கத்

## 'அகல் விளக்கு'

'சித்ரகலா' என்ற பெயரில் புதிதாக இளம் கலைஞர்களால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் நாடக அரங்கு தங்கள் முதல் தயாரிப்பாக 'அகல் விளக்கு' என்ற நாடகத்தை அரங்கேற்றுகின்றனர்.

அந்நாடகத்தில் 'மஞ்சள் குங்குமம்' ஸ்ரீசங்கர், எலன்குமாரி, 'நிர்மலா' சின்னையா, 'மீனவப்பெண்' சுசில்குமார், சிங்கள சினிமா சிரிப்பு நடிகர் பி. எஸ். பெரேரா ஆகியோர் நடிக்கின்றனர். நாடகத்தை 'மஞ்சள் குங்குமம்' உதவி டைரக்டர் அந்தனிஜீவா டைரக்ட் செய்கின்றார். மார்ச் மாத இறுதியில் கொழும்பில் அரங்கேற்றப்படும்.

## சிவாஜி வரலாறு

சிவாஜி கணேசனுக்கு 'சிவாஜி' எனப் பெற்றுக் கொடுத்த வீர சிவாஜியின் வாழ்க்கை தமிழில் படமாகிறது. கணேசனே சிவாஜியாக நடிக்கிறார். இதனை நடிகர் வி. கே. ராமசாமி தயாரிக்கிறார்.

''வீரசிங்கம் சிவாஜி'' என்று பெயர் சூட்டப்பட விருக்கும் இப்படத் தொடக்கவிழா இம்மாத இறுதியில் நடைபெறும்.

## மகளும் தாயும் மாமியும் மருமகளுமாக நடிக்கின்றனர்

''தெய்வமாளுள்'' என்ற ஒரு தெலுங்குப் படத்தில் ஜெயலலிதாவும் சந்தியாவும் ஒன்றாக நடித்துள்ளனர். அவர்கள் அதில் மாமியும் மருமகளுமாக நடித்துள்ளனர் என ஒரு [illegible] கூறுகிறது.

## கலையுலகில் இன்றைய தமிழக முதல்வர்

'யோகி'

கட்டங்களுக்கு கருணாநிதி வசனம் எழுதச் சம்மதித்தார். அப்பொழுது கருணாநிதி வசனம் எழுதி வந்த படங்களிலெல்லாம், புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். தான் கதாநாயகனுக நடித்தார். இந்த நேரத்தில் 'தூக்கு மேடை' என்றநாடகத்திற்கு அரசாங்கம்தடைவிதித்தது.

கருணாநிதி வசனம் எழுதிய படங்கள் நல்ல வருவாயை மட்டுமல்ல, பகுத்தறிவு கொள்கைகளையும் பத்தை ஏற்படுத்திய 'பராசக்தி'க்கு வசனம்எழுதினர்.

கலையுலகின் உச்சக்கட்டத்தில் கருணாநிதி பவனி வந்த போதும், அவர் தன்னை உருவாக்கிய திராவிடமுன்னேற்றக்கழகத்தை மறந்துவிடவில்லை. சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம், அறிஞர் அண்ணாவையும், கழகத்தையும் தமது வசனங்களில் மறைமுகமாகவே புகுத்திவந்தார்.

திருநாடே, நீ சிலந்திக் கூடாக மாறியதுஎப்போது? வந்தாரை வாழவைக்கும் வண்டமிழ்நாடே, நீசொந்த நாட்டானையே சுரண்டுவது எத்தனை நாளாக? வீரப் பெண்களின் ஏடுகளை எழுதி எழுதி ஏற்றம் பெற்ற என் அருமைப் பொன்னாடே, நீ வீதிகளிலே விபச்சாரிகளைத் திரிய வைத்து உன் விழிகளை மூடிக்கொண்டது ஏன்? ஏன்? தமிழ்நாடே, இது தானு

(5ம் பக்கம் பார்க்க)

## படவுலகில்

இரட்டைத் தோற்றத்திற்கும் எம். ஜி. ஆருக்கும் மிகுந்த ராசியுண்டு. 'நாடோடி மன்னன்,' 'ராஜா தேசிங்கு', 'எங்க வீட்டுப்பிள்ளை', 'ஆசை முகம்', 'குடியிருந்த கோயில்' ஆகியவை மிகவும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவை.

நடிகை பாரதிக்கு பாரதி என்ற பெயரை சூட்டிய காரணம் ஏன் தெரியுமா? இந்திய சுதந்திர நாளில் அவர் பிறந்ததால், சுதந்திர உணர்வைஊட்டியபாரதியாரின் நினைவாக அந்தப் பெயரை அவருக்குச்சூட்டினார்கள்.

அஜந்தா பிலிம்ஸ் தயாரிக்கும் பெயரிடாப்படத்திற்கு பர்மிய அகதிப் பெண் அன்னம்மாள் கதை எழுதியுள்ளார். பல சிறுகதைகள் எழுதியிருக்கும் ஸ்ரீமதி என்பவர் கஸ்தூரி பிலிம்ஸ் படத்திற்குக் கதை எழுதியிருக்கிறார். சேகர் புரொடக்ஷன் 'பாலம்' படத்தின் வசனகர்த்தா ஏ. லீலா. இவர் ஏ.வி.எம். ராஜனின் ஜோடியாக அதில் நடிக்கவும் செய்கிறார். 'அன்னை சொன்ன சொல்' நடிகை ராஜஸ்ரீயின் கதை.

இப்பொழுது சென்னையில் வெளியாகியிருக்கும் 'சிங்கப்பூர் சீமான்' வில்லன் நடிகர் டி. கே. ராமச்சந்திரனின் சொந்தப் படம்.

'கேப்டன் ரஞ்சன்' என்ற படத்தில் பழைய நடிகர் ரஞ்சன் கதாநாயகனுக நடித்து வருகிறார். இவருக்கு ஜோடியாக புதுமுகம் வனஜா என்பவர் நடிக்கிறார்.

'எம்.'

## பலசுவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதை

3-ம்பக்கத் தொடர்ச்சி)

தாக்கம், என் தேக்கத்தை மறைத்து என்னை ஆக்கிரமித்து, ஒரு தனி வேகத்தைஎனக்கு தந்ததை இன்று உணருகின்றேன்.

செல்வத்தின் நட்பினுல் ஏற்பட்ட தாக்கம், என்னை நாவல் எழுதத்தூண்டியது என்ருல்-

என் நாவல் அருமையாக உருப்பெற்றுக்கொண்டிருந்தது.

பிரமன் தன் மனைவிக்கு தன் கைவண்ணத்தைக் காட்ட விரும்பி, ஓர் அழகான குழந்தையைச் சிருஷ்டிக்கப்போகிருன்.

செந்தாமரையின் வண்ணங்கொண்டு முகத்தைப் படைத்து, கயல் மீன்கள் இரண்டை கண்கள் இருக்குமிடத்தில் பொருத்தி, எள்ளுப் பூவைப் பார்த்து நாசியை வைத்து, கோவைப் பழத்தையே இதழ்களாக்கி, பவளத்தையே காதுகளாகி, வெண்சங்கைக் கழுத்தாக்கி, காந்தள்மலர்களைக் கைவிரல்களாக்கி, உடம்பைப் படைத்து - கால்களில் ஒன்றைப் படைத்துவிட்டு, மறு காலைப்படைக்கும்பொழுது-

''ஆஹா...! ஆ ஹ ா!'' என மனைவி கூத்தாட, பிரமன் எக்களிப்பு மிகுதியினுல் மனைவியைப்பார்க்க...

கண்கள்ஒன்றையொன்று கௌவிக்கொள்ள... ஆ...! அந்தோ- கை பிசகிவிட்டது. படைப்புக்கு ஆளாகியிருந்த அந்தக் குழந்தை... ஒற்றைக்கால் ஊனமாகிவிட்டது.

என் நிலையும் அதே நிலைதானு?

இன்றும், என் நாவலை முடிக்க, நான் எழுதவேண்டியது கடைசி அத்தியாயமே! அழகாக அமைந்த என் நாவலின்இறுதிவெற்றி, கடைசி அத்தியாயம்அமைப்பதில்தான் இருக்கின்றது.

அதை எழுதிமுடிக்குமுன்பாக, அவளைக் காணவிரும்பினேன்-

இன்று கண்டேன்.

அவள் கதைத்தாளா? இல்லை... நான் பேசப்பேச, விரக்தியுடன் என்னைத் தட்டிக்கழிப்பதுபோல, வெறும் 'உம்!' கொட்டினுளே தவிர, வாய் திறந்து 'ஒரு வார்த்தை' என்னுடன் பேசவில்லையே!

ஃ

பஸ்நிலையத்தில் நின்றேன். குட்டிபோட்ட பூனைபோல அங்குமிங்கும் நடந்தேன். அவள் முகத்திலே மனங்கவரும் சிரிப்பை நான் காணவில்லை.

அவள் சிரிப்பைக் காண விரும்பி, அவள் பஸ்போகும் வழியில், அவளுக்குத் தெரியும் வகையில், நின்று கைகாட்டினேன்.

அவள் சிரித்தாளா?

முன்புபோல் கைகாட்டினுளா? நான் மறையும்வரை இருந்தும், எழுந்தும், திரும்பியும் கைகாட்டி மகிழும் என் செல்வம்- எனக்கு கைகாட்டவில்லை.

என் சிந்தையிலே தடுமாற்றம்! என் செய்வது என்று புரியாத நிலை!

என் அறைக்குத் திரும்பினேன்.

'நாவலை எழுதி முடிப்போம்' என்று பேனையைத் தொட்டால், பேனை நகர மறுக்கின்றது.

இன்று என்ருல் எழுத முடியவில்லை. மனதிலே அமைதியில்லை. அவள் நினைவு வாட்டுகிறது.

மாது அவளை மறக்க- மதுவை நாடினேன். மதுவும் முடிந்துவிட்டது. மாது அவளை- நான் மறந்தேனு? அவள் என் மனதில் நின்று விளையாடுகின்ருள். குடித்த மதுவும், குமட்டும் மணத்துடன் வெளியே வந்துவிட்டது.

என் செல்வம் மறக்கமுடியாதவள். என்ருல் அவளை மறக்கவேமுடியாது. அவள் இதயத்தோடு இதயமாகக் கலந்துவிட்டாள்.

என் முதற் குழந்தையான நாவலும், ஓர் ஊனக்குழந்தையாய்த்தான்விடுமோ? இனிமேல் அந்த நாவலை என்ருல் எழுதிமுடிக்க முடியாது! எழுதத்தான் அவளுடைய தாக்கம் என்னிடம் இல்லையே!

என்மனத்திலேயே ஊனம் விழுந்துவிட்டபொழுது-என் நாவல் ஊனமடைந்தால் என்ன? சேதமடைந்தால் என்ன?

(யாவும் கற்பனை)

# தீந்தமிழ்த்தீ

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் அர்ப்பணிக்கத் தயாராவான் உண்மையுணர்வுள்ள கவிஞன்.

கயற்கண்ணி:- தங்களோடு உரையாட யான் தகுதியற்றவள். ஆயினும் தங்கள் நலத்தில் அக்கறை கொண்டவள். தங்கள் உயிரே எனது உயிரென எண்ணுபவள். தாங்கள் தமிழுக்குத் தனியாகப் போராடத் துணிந்தமை நினைந்து கலங்காதிருக்க முடியுமா?

நக்கீரர்:- அப்படிக்கூருதே கயற்கண்ணி. யான் மட்டும்தான் தமிழுக்காகப் போராடுகிறேன் என்று நினைத்து விடாதே. போராட்டத்தை யான் தலைமைதாங்கித் தொடங்கி வைத்துள்ளேன். எனது கெழுதகை நண்பர் கபிலர், ஆரிய அரசன் பிரகத்தனுக்குக் குறிஞ்சிப் பாட்டுப் பாடித் தமிழ்ச் சுவையின் அருமையை உணர்த்தியுள்ளார். மற்றைய புலவர்களும் தமிழுக்கு ஊறு நேரும்போது போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவார்கள். உண்மை என்றே ஒருநாள் வெல்லும். கவலையுருதே.

கயற்கண்ணி:- அதை யான் மறந்து விடுகின்றேன். ஆனுல் வேறு எத்தனை கவலைகள் எம்மைச் சூழ்ந்துகொண்டுள்ளன.

நக்கீரர்:- வேறு கவலைகளா?

கயற்கண்ணி:- ஆம். நாளை இல்லத்திற்கு வரும் விருந்தினரை வரவேற்று- இனிதான உணவு ஈந்து இதமான உபசாரமும் செய்திடப் பொருளில்லையே.

நக்கீரர்:- சென்ற திங்கள் தானே மதுரை மன்னன் மனமுவந்து பரிசாக அளித்த யானையையும், மற்றும் மணியையும், பொன்னையும் உன்னிடம் தந்தேன்.

கயற்கண்ணி:- ஆம் தந்தீர்கள். அத்தனையும் நம்மைநாடி வந்த விருந்தினரையும் சுற்றத்தவர்களையும், அயலவர்களையும் மகிழ்விக்கப் பயன் பட்டன.

நக்கீரர்:- பொருள் யாவும் தீர்ந்து விட்டனவா. மற்றவர்களுக்கு ஈந்து உவப்பதில் ஒரு தனி இன்பம் இருக்கிறது. எனது உவகையில் கலந்துகொண்டு இன்புறும் உனது உயர்ந்த உள்ளம் வாழ்க!

கயற்கண்ணி:- எப்படியும் பொருள் வேண்டும் விருந்தினரை உபசரிக்க.

நக்கீரர்:- உனது எண்ணம் எனக்கு நன்ருகப் புரிகிறது. அதற்கு இதுவல்லத்

ஐந்தாம் குரவர் ஆறுமுகநாவலர்—5

# சிதம்பரத்தில் ஞானப்பிரகாச முனிவர்

அறநெறிக் காவலர்

முதலியார் சி. முத்துத்தம்பி

ஞானப்பிரகாச முனிவர் பெருமான் மிக்கமுக்கியமான பாடல்பெற்ற ஸ்தலங்களில் அதிமுக்கியமான கோவிலாகிய வேதாரணியமென்னும் திருமறைக்காட்டில் பரம கருணுநிதியாகிய சிவபெருமானின் திருவருளினுல் வந்து சேர்ந்தார். 'தவமும் தவமுடையாருக்கே.' முனிவர்பெருமான் ஜென்மாந்திரங்களில் பெரும்புண்ணியஞ் செய்திருக்கவேண்டும்.

சம்பந்தர், நாவேந்தர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் மூவரும் இத்தலத்தில்தேவாரம் பாடியிருக்கிருர்கள். இது பாடல்பெற்ற தலமாகும்.

இத்தலம் சதுர்மறைகளாலும் பூசிக்கப்பட்டு, பின் கதவடைக்கப்பட்டது. சம்பந்தசுவாமிகளும், நாவேந்தரும் இத்தலத்திற்கு வருமுன் அடியார்கள் மூலஸ்தானத்தில் ஒரு பக்கத்தில் வழிவைத்து வணங்கிவந்தார்கள்.

இப்புண்ணிய க்ஷேத்திரம் வங்காளவிரிகுடாவில் தமிழ்நாட்டுத் தென்கிழக்கின் கரையோரத்திலுள்ளது. சுவாமிபெயர் மறைக்காட்டு மணவாளர்- வேதாரண்யேசுவரர். அம்மை பெயர் யாழைப்பழித்த மொழியம்மை. இங்கே மூன்று தீர்த்தங்கள் உள. (1) மணிகாணிகைத் தீர்த்தம். (2) நேவபூடணத் தீர்த்தம். (3) வேததீர்த்தம். இத்தலத்தின் மறுபெயர்கள் ஆதிசேதுகோடிக்கரை முதலியன. முனிவர் பெருமான் இத்தலத்தில் திருவடிவைத்தபின் வேதாரணியத்திற்கும் நம் யாழ்ப்பாணத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டாயிற்று. யாழ்ப்பாணத்தவர் சுவாமி தரிசனத்திற்காக அங்கேபோய்க்குடியேறினர். அங்கிருந்துசைவக் குருமார்கள் இங்கு வந்து தொண்டுசெய்தார்கள். இப்போதெல்லாம் இங்கிருந்து போவதும் அங்கிருந்து வருவதும் எவ்வளவு கஷ்டமென்பதுயாவருக்கும் தெரியும்.

முனிவரவர்கள் பெரும் தீர்த்தங்களில் நீராடி சிவபெருமானையும் அம்மையையும் விழுந்து சாஷ்டாங்கமாக வணங்கி, உய்த்தேன் உய்தேனென்று ஆனந்தப் பாஷ்பம் பொழிந்தார். புண்ணிய பூமியில் கால் வைத்தவுடன் பூரணதுறவைக்கைக்கொண்டார். அங்கிருந்து, இறைவன் வழிகாட்டபூம்புகலூரை, நாவுக்கரசர் முத்தியடைந்த புண்ணிய க்ஷேத்திரத்தை, முத்தியடையப்போகும் ஞானப்பிரகாசமுனிவர் பெருமான் புண்ணிய மேம்பாட்டினுல் வந்தடைந்தார். வந்துஅவ்வூரில்கோவில்கொண்டிருக்கும் பெருமானின் திருமேனியை முப்போதும் தீண்டிப்பூசிக்கும் தவமுதல்வர் பெரிய அண்ணுச்சாமியிடம் சிவதீட்சைபெற்று சிதம்பரம் போனுர்.

நாவலரென்று சொன்னுல் அச்சொல் எப்படி ஆறுமுகநாவலரைக்குறிக்குமோ, மலர் என்றதும் எவ்வாறு தாமரைப்பூ உணரப்படுகிறதோ, அவ்வாறே கோவில் என்று சொன்னதும் அச்சொல் சிதம்பரத்தையே குறிப்பது ஒரு சிறப்பு.

முழுவதிலுமுள்ள சைவசமயத் திருக்கோவில்களில் அதிமுக்கியமான தலங்கள் மூன்று. அவையாவன: சிதம்பரம், திருவாரூர், காசி. இந்தத் தலங்களில் திருவாரூரில் பிறந்தவர்களுக்கு முத்தியின்பம்சித்திக்குமென்பதும், காசியில் இறந்தவர்களுக்கு முத்தியின்பம் கிட்டுமென்பதும் ஆனுல் சிதம்பரத்திலே நடராசரின் திருவடியைத் தரிசித்த அளவிலேயே முத்தி சித்திக்குமென்பதும்நம்பிக்கை. பிறத்தலும் இறத்தலும் மக்களைப் பொறுத்ததல்ல. ஊழ்வினையைப் பொறுத்தது. மணிவாசகப் பெருமான் தாம்பாடியசிவபுராணத்தில்

'புல்லாகிப் பூடாய்ப்
புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவை
யாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப்
பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகிமுனிவராய்த்
தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்
தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்
திளைத்தேன் எம்
பெருமான்
மெய்யே உன்பொன்
னடிகள் கண்டின்று
வீடுற்றேனே''

என்று திருவாய் மலர்ந்திருக்கின்ருர்.

தாயுமானசுவாமிகள் ''எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான் யாதினுமரிது அரிது இப்பிறவி தப்பினுல் எப்பிறவிவருமோ வேறுவருமோ வறிகிலேன்' என்று பாடியிருக்கிருர்

மண்ணுந் தணலாற
வானும் புகையாற
எண்ணரியதாயு
மிளைப்பாறப்-பண்ணு
மயன்
கையாறவுமடியேன்
காலாறறங் கண்பார்
ஐயா திருவையாறு''

என்று பட்டினத்தடிகள் பாடினுர்.

மானுடப்பிறவியில் நாம் வந்து சேருதல் கடலைக் கையால் நீந்துதலையொக்கும். மனிதனுய், அதிலும் தமிழனுய், அதிலும் சித்தாந்த சைவனுய் புண்ணிய பூமியாகியபரதகண்டத்தில் பிறக்க ஜென்மாந்திரங்களில் கோடி புண்ணியஞ் செய்திருத்தல் வேண்டும்.

(தொடரும்)

# கூண்டில் அடைத்து வைத்து என்ன ரஸனையைக் கண்டீர்கள்?

**அதோ** தெரிகிறதே, அந்த உயர்ந்து வளர்ந்திருக்கும் பெரிய புளியமரம். அதில்தான் நான் இராப்பொழுதைக் கழித்தேன். ஆமாம் நீங்கள் நினைத்தது போல எந்தக் காலமும் நாங்கள் மரப் பொந்துகளில் வசிப்பதில்லை. குஞ்சு பொரிக்கும் சமயம்மட்டும் நானும் குஞ்சுகளும் பொந்தில் இருப்போம். குஞ்சுகளுக்கு சிறகு முளைத்தபின் மரக்கிளைகளில்தான் எங்கள் சீவியம் நடக்கும்.

புளியமரத்தை நாம் விரும்புவது ஏனென்று கேட்கிறீர்கள்? இந்த ...

கேவலம் இந்தப் புளியங்காயைக்கூடத் தின்னவிடாமல் நீங்கள் எங்களுக்குத் தடை போடுவதை நினைக்கத்தான் கோபமாயும், ஆச்சரியமாயும் இருக்கிறது. புளியமரத்தை ஆண்டவன் ஒருவன் படைத்திருக்கிருன். அதில் காய்க்கும் காய் உங்களுக்கு மட்டும்தான் சொந்தமானதா? ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமானமென்று பெரிய வேதாந்தம் பேசும் நீங்கள் இந்தப் புளியங்காயை எங்களுக்கேன் தர மறுக்க வேண்டும்? புளியமரத்தை இவ்வளவு உயரமாக ஆண்டவன் படைத்திருப்பது அதன் காய்கள் உங்கள் கைக்கு எட்டாமல் வானத்தில் சஞ்சரிக்கும் எம்போ...

அடுத்தபடியாக உங்கள் நெல்லை அழித்து நாசம்செய்வதற்கு கிளிகளாகிய நாங்கள் வந்திருக்கிறேம். நெல் வயல் இல்லாத இடங்களில் எள்ளு, பயறு, சாமி, குரக்கன் முதலிய எந்ததானியம் விளையும் வயலையாவது தேடிப்போய் விடுவோம். இவை ஒன்றும் இல்லாதபட்சத்தில் மிளகாய் தோட்டத்தை நாடுவோம். மிளகாய்ப் பழம்தின்பதற்கு எங்களுக்கு கொள்ளை ஆசை. பச்சை பசேலென்ற மிளகாய்ச் செடியில் செக்கச் ...

ஒரு சிறு கொப்பை கவ்விப் பிடித்துக்கொண்டான். இனி பயமில்லை. அந்த மரத்திலிருந்தபடியே கொப்புக்குக் கொப்பு தாவிப் பறக்கக் கற்றுக்கொள்வான். மரக் கிளைகளில் நாங்கள் ஊர்ந்து ஊர்ந்து இரைதேடுவதற்கு எங்கள் சொண்டும் நல்ல ஒத்தாசையாயிருக்கிறது. இறக்கைகளை உபயோகிக்காமலேயே சொண்டினுல் கவ்விக்கவ்வி அடிமரத்திலிருந்து நுனி மரத்துக்கு போய்விடுவோம்.

ஆமாம், என்னுடைய சரித்திரத்தை இவ்வளவு உன்னிப்பாக கேட்டுக் கொண்டிருக்கிறீர்களே! எங்கள் ஜாதிக்கு நீங்கள் செய்யும் ஒரு மன்னிக்கமுடியாத பாவத்தை எப்பொழுதுதான் நிறுத்தப்போகிறீர்கள். உண்மை, நீங்கள் எங்களைக் கொல்வதில்லைத்தான். எங்கள் இறைச்சி உங்கள் நாவிற்கு ருசி இல்லாததினுலோ அல்லது நாங்கள் அழகான பட்சிகள் என்பதினுலோ நான் அறியேன். காட்டில் வசிப்பவர்களும் குறவர்களும் மட்டுமே எங்களை சுட்டுத் தின்பதுண்டு. உங்கள் தானியங்களுக்கும் விளைபொருட்களுக்கும் நாங்கள் சொல்லொணுத சேதம் விளைவித்தபோதிலும் எங்களை சும்மாவிட்டுவிடுகிறீர்கள். எங்களைச் சுட்டுக்கொல்வதோ மருந்துபோட்டுக் கொல்வதோ மிக சிரமமான காரியம். அதனுல்தான் விட்டுவிட்டீர்களோ?

இது எப்படியாயினும் எங்களை சிறுவயதிலேயே பிடித்துக் கம்பிக்கூண்டுக்குள் அடைத்துவைத்து எங்கள் சீவியம் முழுவதையும் பாழாக்கிவிடுகிறீர்களே! இந்த கெட்ட வழக்கத்தை அநியாயமான கேரோ வழக்கத்தை எப்பொழுது

சொன்னது: கிளி

# நட்சத்திரத் திருடர்கள்!

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வன் முத்தலிபுடன் அவள் அகப்பட்டுக் கொண்டாள்.

இரண்டு பேருக்கும் ஒவ்வோர் ஆண்டு கடுங்காவல் தண்டனை கிடைத்தது.

துள்ள பல சம்பவங்களில் ஒன்று இப்படி.

## ஹிந்தி நடிகர்களிடம் திருட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வன் முத்தலிபுடன் அவள் அகப்பட்டுக் கொண்டாள்.

இரண்டு பேருக்கும் ஒவ்வோர் ஆண்டு கடுங்காவல் தண்டனை கிடைத்தது. பொருளும் விஜயகுமாரிக்குத் திரும்பியது.

## இவரையும் விடவில்லை

முன்னைய பிரபல நடிகர் கே. ஆர். ராமசாமியையும் விடவில்லை திருடர்கள். அவர்தான் ரிடையராகிப் போய் போதிய பணவருவாய் இல்லாமல் இருக்கிறாரே என்று பாவ புண்ணியம் பார்க்காமல் கைவைத்து விட்டார்கள். அவருடைய வீட்டில் கைவைக்காமல் அவர் பிரயாணஞ் செய்துகொண்டிருந்த முதல் வகுப்புப் பெட்டிக்குள் புகுந்து கே. ஆர். ஆரின் பெட்டியை அபேஸ் செய்துகொண்டு பாய்ந்துவிட்டான் ரங்கசாமி என்ற ஆசாமி. பெட்டியில் 3 பவுண் தங்கச் சங்கிலியும், 10 பவுண் சங்கிலியுடன் கூடியகைக்கடிகாரமும் மற்றும் ரூபாய் 1500 ரொக்கமும் இருந்தன. பொலிசாரின் தீவிரப் புலன் விசாரணையின் பின் பொருட்கள் மீண்டன. ரங்கசாமி மூன்று மாதக் கடுங்காவல் தண்டனை அடைந்தான்.

இனி ஒரு துணை நடிகை சமாச்சாரத்தைக் கவனியுங்கள். இந்தத் துணை நடிகை தன் பொருள் எதையும் பறி கொடுக்கவில்லை. பதிலாக அவரே ஒரு திருடியாக மாறிவிட்டார்.

இந்தத் துணை நடிகையின் பெயர் செல்வி சாந்தா. மாலதி என்றும் சொல்வதுண்டாம். இவா பங்களூரில் ''நெஞ்சில் ஓர் ஆலயம்'' நடிகர் கல்யாணகுமாரின் மனைவி ரேவதியின் இல்லத்தில் கைவரிசையைக் காட்டிவிட்டார். ரூபாய் பத்தாயிரம் அபேஸாயிற்று.

இந்தச் சாந்தா டாக்டர் ஒருவரின் பெண்ணென்றும் பல பல சமயங்களில் பல பெயர்களில் கோடம்பாக்கம், தியாகராஜ நகர் போன்ற இடங்களில் நடமாடி பலரையும் தன் சிக்க வலையில் சிக்கவைத்து என்னென்னமோ ஆட்டங்கள் போட்டாரென்றும் பொலிஸ் விசாரணையிலிருந்து தெரிய வந்தது. இப்பொழுது இவர்மீது வழக்கு நடப்பதாகத் தெரிகிறது.

தென்னிந்திய சமாச்சாரங்கள் இப்படியென்றால் வட இந்தியாவில் நடந்துள்ள பல சம்பவங்களில் ஒன்று இப்படி.

## ஹிந்தி நடிகர்களிடம் திருட்டு

பிரபல ஹிந்தி நடிகரான சஞ்சயிடமிருந்து அவரது விலை உயர்ந்த சில பொருட்களை அவரது ரசிகைகள் சிலர் திருடிக் கொண்டு போய்விட்டனர். காஷ்மீரில் நடந்தவொரு படப்பிடிப்பில், ஸ்ரீநகர் ஹோட்டல் ஒன்றில் இது நடந்திருக்கிறது. ஆட்டோ கிராப் வாங்க வந்தோம் என்ற பெயரில் நடந்த திருவிளையாடல் இது. இதில் பத்துப் பன்னிரண்டு ரசிகைகள் சம்பந்தப் பட்டிருக்கிறார்கள். காணமற்போன பொருட்களோ, தங்கச் சங்கிலி, வைரமோதிரம் ஆகியவை. கமராவும் காணமற் போயிற்று. ஆனால் கடைசியில் தோட்டத்திலிருந்து கண்டெடுக்கப் பட்டது.

மிகச் சமீபத்திய ஒரு சம்பவத்தோடு இதை முடிவுக்குக் கொண்டு வருகிறேன். நம் மதிப்பிற்குரிய நடிகர் திலகம் சிவாஜிகணேசனைப் பாராட்டவென்று கூட்டப்பட்ட விழாவில் அவருடைய மிக விலையுயர்ந்த கைக் கடிகாரம் மிக சாதுரியமாக அபேஸ் செய்யப் பட்டது. இன்று வரையில் திருடனைக் கண்டு பிடிக்க முடியாமல் தவியாய்த் தவிக்கிறார்கள் பொலிசார்.

''லீடன்''
LEYDEN
தயாரிப்புகள்
பெனியன்
ஸ்போட் சேட்
ரி சேட்
ரெறி சேட்
ரெறி பிளவுஸ்
பேபி வெஸ்ட்
கால் மேஸ்
(Nylon & Cotton)
லீடன் காமென்ஸ்
74 A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330

ளம் வாழ்க!

கயற்கண்ணி:- எப்படியும் பொருள் வேண்டும் விருந்தினரை உபசரிக்க.

நக்கீரர்:- உனது எண்ணம் எனக்கு நன்றாகப் புரிகிறது. அதற்கு இதுவல்லத் தருணம். மன்னன் நெடுஞ்செழியன் தலையாலங் காலத்துப் போரில் ஈடுபட்டு இடையறாது அமர் புரிகின்றான். போர் முடிவெய்தி வெற்றிவாகை சூடி மன்னன் அரண்மனை திரும்பியதும் உனது எண்ணத்தை நிறைவேற்றுவோம்.

(தொடரும்)

## உலகிலுள்ள

(2-ம்பக்கத்தொடர்ச்சி)

கேட்டதென்ன? ஒரு கலம் நெல் அறுத்தால் 6 லிட்டர் நெல் கூலிவேண்டுமென்றுதான். இந்த நெல்கூலி அதிகமா குறைவா என்பது வேறுவிஷயம். ஆனால் அவர்கள் தங்கள் குடும்பம் பசியாற உண்ணவேண்டுமென்பதற்காகவே அவர்கள் கூலியைக்கேட்கின்றனர். பசிக்கு உணவுண்டு என்று அடிப்படையான உத்தரவாதம் செய்துவிட்டால் கூலித்தகராறு, பட்டினிப்பீதி இவை ஏன் ஏற்படவேண்டும்?

வரவரக் கூலி அதிகரிப்பதாயும், மாவட்ட அதிகாரியின் சமரசத்திட்டத்தின் படி, அதிக கூலியை அளிக்க முடியாதென்றும் தஞ்சை மிராசுதார்கள் எதிர்த்துள்ளனர். இதேசமயம்42பேரை உயிருடன் எரித்ததற்காகப் பழிவாங்கவேண்டுமென்றும் கம்யூனிஸ்ட் தலைவர்கள் கேட்கின்றனர். வெண்மணிக்கிராமத்தில் வெந்துமாண்ட 42 பேர்களும் ஹரிஜனர்களே. பலாத்கார வழிகளில் ஹரிஜனர்களை மேலும் செலுத்துவது அவர்களுக்கு நல்லதா? ஊருடன் பகைக்கின் வேருடன்கெடும் என்பது மூதுரை. நிலங்களிடையே பரம ஏழைகளாக வாழும் ஹரிஜனங்கள் இப்படி அவதிப்படுவதைக்கண்டால் மகாத்மா காந்தி என்னசெய்வார்? சாகும்வரை உண்ணாவிரதம் கிடக்கமாட்டாரா?

இந்தச் சிக்கலைத்தீர்க்க பலாத்காரம் சரியான வழியல்ல. பலாத்காரமுறை நிலைமையை மேலும் மோசமாக்கி, துரதிருஷ்டசாலிகளான ஹரிஜனங்களை இன்னும் அதிக சங்கடங்களுக்கு உள்ளாக்கும். நிலச் சுவாந்தார்களும் அதிகரிக்கும் கம்யூனிஸ ஆபத்துக்களால் நிம்மதியாககிராமங்களிலும் வசிக்கமுடியாதுபோகும். நெல் உற்பத்தியை தனிப்பட்டவரின் லாபத்துக்காக அன்றி மக்களின் பசியைத் தீர்க்கவே செய்யவேண்டுமென்ற அடிப்படைக்கொள்கையை தமிழக அரசு உள்ளிட்டு பலரும் ஒப்புக்கொண்டு ஒத்துழைப்பதின் மூலமே அன்புவழியிலே, நிரந்தரமாக இப்பிரச்னையைத் தீர்க்க வழிபிறக்கலாம். அன்புவழியே தமிழரின் பண்புவழி.

(முற்றும்)

கள் சி[illegible]ம் நடக்கும்.

புளியமரத்தை நாம் விரும்புவது ஏனென்று கேட்கிறீர்கள்? இந்த நாட்

## எ[...] வாழ்வில் ஒரு நாள்—5

களில் புளியமரங்கள் கொத்துக் கொத்தாய் காய்த்திருக்கின்றனதானே. காலையில் நீங்கள் எழுந்து நடமாடத் தொடங்குவதற்கு முன்னமே நாங்கள் காலைப் போசனத்தை முடித்துக் விடுவதற்கு இது பெரிய வசதியாக இருக்கிறது. கிழக்கு வெளிப்பதற்கு முன்பே துயில்விட்டு எழுந்து விடும் நாங்கள் உடனேயே புளியங்காய் கோதிக் கொறிப்பதற்கு ஆரம்பித்து விடுகிறோம். புளியம் விதைகள் முற்றிவரும் காலத்தில் அவற்றிலுள்ள பருப்பையெடுத்து உண்பதில் எமக்கு அசாத்தியமான பிரியம். காய் முற்றிவிட்டால் அது நமக்குப் பிரயோசனப்படாது.

[illegible]
எங்களுக்கேன் தர மறுக்க வேண்டும்? புளியமரத்தை இவ்வளவு உயரமாக ஆண்டவன் படைத்திருப்பது அதன் காய்கள் உங்கள் கைக்கு எட்டாமல் வானத்தில் சஞ்சரிக்கும் எம்போன்றவர்களுக்குக் கிடைக்கட்டும் என்ற நோக்கத்துடன் அல்லவா?

பழப்புளி வரத்துக் குறைந்து விட்டபடியால் உங்களுக்குக் கறிக்குப் போடப் போதிய புளி இல்லையே என்று நீங்கள் வருத்தப் படுகிறீர்கள். ஆகையால் தான் உள்ளூரில் இருக்கும் புளியமரங்களை இப்படிக் கட்டுக்காவலாக வைத்திருக்கிறீர்கள். நாங்கள் கோதி விட்டுக் கீழே போடும் புளியங்காய்த் துண்டுகளைக் கூட நீங்கள் பத்திரமாகப் பொறுக்கி எடுத்துக் கொண்டுபோய் கறிக்குப் போடுவது எங்களுக்குத் தெரியும். ஆனால் நாம் என்ன செய்யலாம்? விடிய எழுந்ததும் வயிறு விராண்டுகிறதே.

நாங்கள் புளியங்காய் போசனம் செய்யும்போது ஓசைப்படாமல் இருந்து உண்போம். மரத்தில்நாங்கள் இருப்பதே உங்களுக்கு தெரியமாட்டாது. புளியங்காய்த் துண்டுகள் கீழே விழும் சத்தந்தான் நாங்கள் இருப்பதைக் காட்டிக் கொடுக்கும். வயிறார உண்ட பின்பு கலகலப்பாக கீயா மாயா என்று கீச்சிடுவோம். சற்று நேரம் காலை வெய்யிலில் சிறகடித்துப் பறந்து தேகாப்பியாசம் செய்து கொள்ளுவோம். பருந்து, வல்லூறுகளைக் கண்டால் கூச்சலிட்டுத் துரத்திக் கலைப்போம். அவை எங்கள் குஞ்சுகளைத் திருடும் சத்துராதிகள். இப்படியே சிறிதுநேரங் கழிய எல்லோருமாக [நாங்கள் கூட்டம் கூட்டமாக சீவிக்கும் பறவைகள்] மரக்கிளைகளில் உட்கார்ந்துகொண்டு சிறகு கோதுவோம். இது நாங்கள் அடிக்கடி செய்யும் ஒரு வேலை. இறகுகள் ஒன்றன் மீதொன்று படைபடையாக இருந்தால் நாங்கள் பறந்து திரிவதற்கு சுலபமாயிருக்கும். அவை அலங்கோலமாய் அங்கொன்றும் இங்கொன்றும்குத்திட்டுநின்றால் காற்றைக் கிழித்துக் கொண்டு வேகமாகப் பறப்பது கடினம்.

இந்த வேலை முடிந்ததும் எல்லோரும் கூட்டமாக வயல்வெளிகளுக்கோ, தோட்டம் துரவுகளுக்கோ பறந்து போய்விடுவோம். நெல் முதிர்ந்துவரும் நாட்களில் எங்களை ஆயிரக்கணக்கில் காணலாம். எனக்கு

[illegible]
காய்ச் செடியில் செக்கச்

## சொன்னது: கிளி எழுதியது: வி. என். பி.

செவேலென்று பழங்கள் சிவந்திருக்கும்போது நாங்கள் அதிலிருந்து பழம் கொறிப்பதை நீங்கள் பூதக் கண்ணாடி வைத்தாலும் பார்க்கமுடியாது. அத்தனை வர்ண ஒற்றுமை எங்களுக்கும் மிளகாய்ச் செடிக்கும்!

எங்கள் குடும்பம் பெரிய தோர் குடும்பம். ஆனால் உங்கள் ஊரில் பனங்கிளி, தென்னங்கிளி, மருதங்கிளி என்று நீங்கள் அழைக்கும் சாதாரண பச்சைக்கிளிகளே வாழ்கிறோம். தென்அமெரிக்காவிலும், ஆபிரிக்காவிலும் நியுகினி முதலிய இடங்களிலும் எங்கள் அண்ணன்மாரும் தம்பிமாரும் வசிக்கிறார்கள். எங்கள் மூத்தண்ணர் ஒரு பெரிய வான்கோழியின் பருமனை ஒத்திருப்பார். அவருடையசொண்டால் உங்கள்தலையில்கொத்தினால் மண்டை கிழிந்துவிடும். எங்கள் கடைக்குட்டி தம்பி ஒரு கொழுக்கட்டை அளவுதான் இருப்பான். நாங்கள் தனிப் பச்சைநிறம். அவர்களோ பற்பலவர்ணக்கலப்புகளோடு விளங்குவார்கள். பஞ்சவர்ணக் கிளியைக்கண்டால் நீங்கள் அப்படியே சொக்கிப்போய் விடுவீர்கள்.

இங்குள்ள நாங்கள் பெரும்பாலும் பங்குனி, சித்திரை மாதங்களிலேயே குஞ்சு பொரிப்போம். இரண்டு முதல் நான்குகுஞ்சுகள் வரை தேறும். பிறந்தவுடனே அவர்கள் ஒரு மயிருமில்லாத இறைச்சி பிண்டங்களாய் அவலட்சணமாயிருப்பார்கள். நாள் போகப் போகத்தான் பட்டுப்போல பச்சை உரோமங்களும் இறகுகளும் தோன்றும். அதோ அந்த கிளையிலிருந்து கிக்கிக்கி என்று என்னை அழைக்கிறானே அவனை நேற்றுதான் பொந்திலிருந்து வெளியே கூட்டிவந்தேன். இறகுகளை இன்னும் சரியாக அவன் பயன்படுத்த கற்றுக் கொள்ளவில்லை. எனக்குப் பின்னால் பறந்து வந்து அப்படியே பக்கத்திலிருந்த மரக் கிளைகளுக்குள்தொப்பென்று விழுந்தான். எங்கே நிலத்தில் விழுந்துவிடப் போகிறானோ என்று பெரிய திகிலாய்ப் போய்விட்டது. நல்லவேளை சொண்டினால்

வோம்.

ஆமாம், என்னுடைய சரித்திரத்தை இவ்வளவு உன்னிப்பாக கேட்டுக் கொண்டிருக்கிறீர்களே! எங்கள் ஜாதிக்கு நீங்கள் செய்யும் ஒரு மன்னிக்கமுடியாத

## டைரக்டர். . .

(4ம் பக்கத் தொடர்ச்சி)

உன் பெருமை, தகுதி, யோக்யதை?''

18 வருடங்களுக்கு முன்னர் தமிழ்நாட்டைப் பார்த்து இப்படிக் கேட்டவர் இன்று அதே தமிழ்நாட்டிற்குத் தலைவராகிவிட்டார்.

அன்று தான் கண்ட நிகழ்ச்சிகளை மாற்றி அமைப்பார் அவர் என்ற நம்பிக்கை மக்களிடையே இருக்கிறது.

சமுதாயத்தைப்பற்றி 'பராசக்தி'யில் அவர் இப்படிக் கூறுகிறார்: சமுதாயம் பிச்சைக்கார மடம்தான்- ஆனால் அதில் நீ திருவோடில்லாத பரதேசி! சமுதாயம் பைத்தியக்காரர் விடுதிதான்- ஆனால் அதில் நீ கல்லெறியத் தெரியாத பைத்தியக்காரன். சமுதாயம் திருடர்கள் குகைதான்-ஆனால் அதில் நீ கன்னக்கோல் பிடிக்கத் தெரியாத திருடன்! சமுதாயத்தைக் காரசாரமாகத் திட்டுகிறாயே, இப்போது யோசித்துப்பார்... எத்தனை பேர் பிச்சைக்கார உடையில் லட்சாதிபதியாகியிருக்கிறார்கள்? எத்தனை பேர் பைத்தியக்காரர் வேஷத்தில் பணக்காரர்களாக மாறியிருக்கிறார்கள்? சமுதாயப் புரட்சி ஆலகால விருட்சத்தின் கிளைகளை வெட்டுவதல்ல, அதன் ஆணிவேரையே பெயர்ப்பதாகும்.

பணம்-மோகனமான மூன்றெழுத்து அழகி! முட்டாளின் மஞ்சத்திலே கொஞ்சுவாள்! முரடனின் பிடியிலே சிக்குவாள்! படித்தவனைப் பம்பரம்போல் சுற்றிவிடுவாள்! பஞ்சையைத் துடிக்க விடுவாள்! பாசத்தைத் துண்டிப்பாள்! நேசத்தைக் கண்டிப்பாள்! தெய்வீகத்துக்குத் திரைபோட்டு விடுவாள்! தியாகி வேஷத்திலே திருட்டுச் சதிர் ஆடுவாள். அந்தக் கன்னியின் ஆட்டத்திலே கண்ணிழந்தோர் கணக்கற்றோர்-இப்படிப் பணத்தைப் பற்றி அவர் கூறியிருக்கிறார். இப்படிப்பட்ட வசனங்கள் இளைஞர் சமுதாயத்தில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தின. இதனால் வாலிபர் மத்தியிலே தமக்கென ஓர் இடத்தைப் பிடித்துக்கொண்டார். இதன் காரணமாகவே இன்று அவர் நாட்டின் தலைவராக வரும் வாய்ப்புக் கிடைத்தது.

பிடித்துக் கம்பிக்கூண்டுக்குள் அடைத்துவைத்து எங்கள் சீவியம் முழுவதையும் பாழாக்கிவிடுகிறீர்களே! இந்த கெட்ட வழக்கத்தை அநியாயமான கேரா வழக்கத்தை எப்பொழுதுதான் நிற்பாட்டப்போகிறீர்களோ! கூண்டில் அடைத்து வைத்து எங்களுக்கு நீங்கள் எப்படிப்பட்ட ராஜோபசாரம் செய்தாலும் சுயாதீனமாக எங்கள் சுற்றத்தாரோடு ஆகாயத்தில் சஞ்சரிப்பதுபோன்ற இன்பத்தை உங்களால் கொடுக்க முடியுமா? சுதந்திரம், சுயாதீனம் சுயேச்சை, சுயாட்சி என்றெல்லாம்உங்களுக்குள்பேசி வாதாடி ஒருவரையொருவர் கொலைசெய்யவும் பார்க்கிறீர்கள். ஆனால் வல்லமை குறைந்த எம்போன்ற ஏழைப்பிராணிகளை ஏன் இம்சைப்படுத்தவேண்டும். இயற்கையாக நாம் வாழ்வதை ரசிப்பதற்குப் பதிலாக செயற்கையாக அடிமைப்படுத்தி ரசிக்கப்பார்க்கிறீர்களே! இது என்ன ரஸனையோ!

## நமது நூல் நிலையம்

**வெற்றிமணி:** பொங்கல் மலர் ஆசிரியர்: மு. க. சுப்பிரமணியம். விலை சதம்: ரூ. 1.

வெற்றிமணி- பொங்கல் மலர்வரப்பெற்றோம். நளனை முதல் வள்ளலாக பண்டிதமணி நாட்டியிருக்கும் அழகு இலக்கியத்திற்கே தனி அழகு. பண்டிதர் செந்தமிழ் மணி பொன். கிருஷ்ண பிள்ளை அணிகளின் அடிப்படைத்தலையணியாகிய உவமையை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கியிருக்கிறார். மாணவர்களுக்கு பயன்படக்கூடிய புவியியல் விஞ்ஞானக் கட்டுரைகளும் பொங்கல் மலரில் இடம்பெற்றுள்ளன. காரை. செ, சுந்தரம்பிள்ளை கவிஞர் அமலன், அழகனார், கவிஞர் வி. கந்தவனம் ஆகியோரின் கவிதைகள் கவிதை அரங்கத்தை அலங்கரிக்கின்றன.

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

**காணி:**

உடுவிலில் 6 பரப்பும் கிணறும்; பெண் பாடசாலை அண்மையில் தொடர்பு கொள்ளவும். அ. செ. இராமலிங்கம், தபால் கந்தோர், டெகியோவிற்ற. 690

**கடை:**

கஸ்தூரியார் விதி, 73/1, இலக்கமுள்ள கடை விற்பனைக்குண்டு. வி. கந்தையா, 74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 695

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார சாரம் — அரசியல் நிருபர்

# அண்ணுவுக்கு ஆட்சி மன்றம் அஞ்சலி செய்யத் தவறியதால் நஷ்டம் யாருக்கு?

## அயூப்கான் பண்பு

## அரியதொரு உதாரணம்

'பிள்ளையார் பிடிக்க குரங்கானகதை' என்பார்கள்.

அண்ணுவுக்கு அஞ்சலி செலுத்துவது சம்பந்தமாக இங்கு எடுக்கப்பட்ட முயற்சியும், அண்ணுவின் பின் தி. மு. க. ஆட்சி சம்பந்தமாக இங்கு சிலர் கிளப்பிய சந்தேகத்தை நீக்குவதற்கு திரு. மு. கருணாநிதி விடுத்த அறிக்கையும் பிள்ளையார் பிடிக்க குரங்கான கதையாகத்தானிருக்கிறது.

ஆட்சிமன்றத்தில் அமரர் அண்ணுவுக்கு அஞ்சலிசெலுத்த வேண்டுமென்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் யாழ்ப்பாணப் பிரதிநிதியுமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் சபாநாயகரைக் கடிதமூலம் கேட்டுக் கொண்டதைத் தொடர்ந்து சபாநாயகர் ஆட்சிமன்றத்திலுள்ள சகல அரசியல் கட்சித்தலைவர்களையும் ஆலோசனைக்காக அழைத்திருந்தார். எதிர்கட்சிக் கூட்டணியினர் இதற்குச் செல்லவில்லை. சிங்கள மகாஜன கட்சித்தலைவரும் தம்பதெனியாப் பிரதிநிதியுமான திரு, ஆர். ஜி. சேனநாயகாவும் பீக்கிங் சார்பு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரும் கம்பஹா பிரதிநிதியுமான திரு. எஸ். டி. பண்டாரநாயகாவும் ஆட்சி மன்றத்தில் திரு. அண்ணுதுரையின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும்யோசனையை வெவ்வேறு காரணங்களுக்காக எதிர்த்தனர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழரசுக்கட்சி, தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் உட்பட தமிழ்ப் பிரதி நிதிகள் அண்ணுவுக்கு ஆட்சி மன்றத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றுவது மிகப் பொருத்தமானதென்றும் பண்புள்ள செயலென்றும் தெரிவித்தனர். அனுதாபத் தீர்மானம் கொண்டுவருவதற்கு அரசாங்கம் ஆதரவளிக்க தயாராக இருந்தது. எதிர்கட்சிக் கூட்டணியினர் கூட்டத்தில் கலந்து கொள்ள வில்லையாலும் சபாநாயகருக்கு எழுதியிருந்த கடிதத்தில் அண்ணுதுரை மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் விஷயத்தைச் சபாநாயகரும் இதில் அக்கறையுள்ளவர்களுமே தீர்மானிக்கவேண்டுமென்று குறிப்பிட்டிருந்தனர். திரு. ஆர். ஜி. யும் திரு. எஸ். டி. பண்டாரநாயகாவும் அனுதாபத்தீர்மானயோசனையை எதிர்த்தனர்' கட்சித் தலைவர்களிடையே ஒருமனதான கருத்து நிலவாமல் அபிப்பிராய பேதம் நிலவும் பொழுது மறைந்த ஒரு தலைவருக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானத்தை ஆட்சிமன்றத்தில் கொண்டுவருவது அந்தத் தலைவரின் நற்பெயருக்கே அபகீர்த்தி உண்டுபண்ணும் என்று சபாநாயகர் சுட்டிக் காட்டியதைத் தொடர்ந்து அனுதாபத் தீர்மானம் கொண்டுவரும் யோசனை கைவிடப்பட்டது.

### மனிதப்பண்பு தாழ்ந்தது

பரம விரோதியாக இருந்தால்கூட ஒருவர் இறந்த பின்னர் அந்தவிரோதத்தை மறந்து அவருக்காக அனுதாபம் தெரிவிப்பது மனிதப் பண்பு. அண்ணுதுரை இலங்கையின்விரோதியல்ல. ஆனாலும் ஆட்சி மன்றத்தில் அவரது மறைவுக்கு அனுதாபத் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றுவது ஒரு பிரச்னையாக்கப்பட்டு அது கைவிடப்பட்டதன் மூலம் அண்ணுதுரையின் பெயருக்கோ, புகழுக்கோ எந்தக் குறையும்ஏற்பட்டுவிட வில்லை; ஏற்படவும் மாட்டாது. இலங்கைபண்பில்லாமல் நடந்து கொண்டது என்று பிறர் கூறக் கூடிய அளவுக்கு இலங்கை தன்னைத் தானே தாழ்த்திக் கொண்டது.

இந்தியாவில், தமிழ் நாட்டில் அரசியல் கொள்கைகளில் அண்ணுதுரைக்குப் பகைவர்களாக இருந்தவர்கள்கூட அண்ணுமறைந்ததும் கண்ணீர் விட்டனர். இன்றும் அண்ணுவைப்பற்றி கண்கலங்கியே பேசுகின்றனர். இதற்கு அங்குள்ள அரசியல் நோக்கம் தான் காரணம் என்று சிலர் சொல்லலாம்.

தம் ஆட்சிக்கு வந்ததனுல் இலங்கைக்கு எந்தவிதஆபத்தும் நேரமாட்டாதென்ற உறுதிமொழியையும் அமரர் அண்ணுதுரை தமிழக சட்ட சபையிலும் பத்திரிகை அறிக்கைகள் மூலமும் பல தடவைகளிலும் அளித்துவந்துள்ளார். ஆனுலும் இங்குள்ள அரசியல் வாதிகள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. ''தூங்குபவனை எழுப்பலாம். தூங்குவது போல பாசாங்கு செய்பவனை எழுப்ப முடியாது'' என்பதுபோல அரசியல் லாபத்தை நோக்கமாகக் கொண்டு நடத்தப்பட்டு வரும் தி. மு. க. பூச்சாண்டியை என்னதான் உறுதிமொழி அளித்தாலும் அவர்கள் விடமாட்டார்கள் என்பது அண்ணுவுக்குத்தெரியும். ஆனுலும் அண்ணுவே தமது வேலைக்காரி திரைக்கதை வசனத்தில் ஒரு பாத்திரத்தின் மூலம் கூறியது போல ''அடிக்குமேல் அடி அடித்தால் அம்மியும்நகரும்' என்ற நம்பிக்கையில் சிங்கள மக்கள் தி. மு. க, ஆட்சியைக் கண்டு அஞ்சவேண்டியதில்லை யென பல தடவைகளிலும் அறிக்கை விடுத்து வந்தார். இலங்கையிலுள்ள தி. மு. கழகத்துக்கும் இந்திய தி. மு. கழகத்துக்கும் எதுவித தொடர்பும் கிடையாது என்றும் அவர் திட்டவட்டமாகத் தெரிவித்து வந்தார். அண்ணு உயிர் வாழ்ந்தால் ஒரு சமயம் நேரிலேயே இங்கு வந்து தி. மு. க. [illegible] தைத் [illegible] முயன்றிருப்பார். இங்குள்ள தமிழ் மக்களின் நல்வாழ்வுக்காக

இயங்குவதாகவே அர்த்தப்படும். இலங்கையிலுள்ள தி. மு. கழகத்துக்கும் இந்திய தி. மு. கழகத்துக்கும் தொடர்பில்லைஎன்றுஅண்ணு கூறியதற்கும் திரு. கருணாநிதியின் கருத்து முரணானதும் கூட.

கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு வெளிநாடுகளில் தலைமையிருக்கும்பொழுது தி. மு. கழகத்துக்கு தமிழ் நாட்டில் தலைமை இருக்கக்கூடாதா என்று கேட்கலாம். வெளிநாடுகளில் தொடர்புள்ள கட்சிகள், இயக்கங்கள், ஸ்தாபனங்கள் பொதுவாக ஜனநாயக நாடுகளில் இருக்கின்றன. ஆனுல் இலங்கைத் தி. மு. கழகத்துக்கும் இந்திய தி. கழகத்துக்கும் தொடர்பில்லையென்று சொல்லிக் கொள்ளும்போது இந்த வாதம் சரிவராது.

இது தவிர இந்தியாவில் திராவிடர்கழகமும்திராவிட முன்னேற்றக் கழகமும் தோன்றியதும் அதற்குக் காரணமாக இருந்த சூழ்நிலைகளும் வேறு. இந்த இரு கழகங்களும் பொதுவாக ஒரே மொழி பேசும் ஒரே இன மக்கள் வாழும் பகுதியில்தான் உருவாகி இயங்கி வருகின்றன. இலங்கை இருமொழிபேசும் ஈரின மக்கள் வாழும்நாடு. இங்கு வாழும் பெரும்பான்மையினர் தங்களை ஆரிய சிங்கள மக்கள் என்று கூறிக் கொள்வதிலேயே பெருமை கொள்கின்றனர். இங்கு திராவிடர் என்று கூறி ஒரு கழகம் இயங்கினுல் இங்கும் ஆரியர் திராவிடர் என்ற பிரச்னையும் அவநம்பிக்கையும் நீடிக்குமேதவிர நீங்க மாட்டாது. இல்லாத பிரச்னையை இங்கு நிலைநாட்டுவதுமாகும்.

'நாம் தமிழர் இயக்க' என்று இங்குஇருப்பதாகவும் தி. மு. க. நடவடிக்கைகளும் நாம் தமிழர் இயக்க நடவடிக்கைகளும் நாடுமுழுவதும் தீவிரமாகப் பரவி வருவதாகவும் திரு. ஆர். ஜி. சேனநாயகா, திரு. ஹேமாபஸநாயகா, மற்றும் சில தேசியப் பத்திரிகைகள் உட்பட பலரும் பூச்சாண்டி காட்டுகின்றனர். சிங்கள மக்கள் மத்தியில் துவேஷப் பிரசாரம் நடைபெறுகிறது.

[illegible]சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. என். சண்முகதாசன் 'டெயிலி நியூஸ்' பத்திரிகையில் எழுதிய கட்டுரையொன்றில் நாம் தமிழர் இயக்கக்கிளை என ஒன்று இங்கே இல்லையென்றும் இந்தியாவில்கூட அது உருப்பெறவில்லையென்றும் எழுதியிருக்கிருர்.

இங்குள்ள தமிழர்கள் இங்குள்ள தலைவர்களை மதிக்கவேண்டும்; கௌரவிக்கவேண்டுமென்றும் சிங்கள மக்கள் விரும்புகிருர்கள். காந்தி, நேரு படங்களையும் அண்ணுதுரை படங்களையும்தான் தமிழர் தங்கள் வீடுகளில் வைத்திருக்கிருர்கள். ஒரு சேனநாயகா படமோ ஒரு பண்டாரநாயகா படமோ தமிழர் வீடுகளில் காணமுடியவில்லையே என்பது அவர்கள் குறை. நியாயமான குறை.

ஆனுல் தமிழர் சிங்களத் தலைவர்களின் படங்களை வீடுகளில் மாட்டிவைப்பது மட்டுமல்ல பூஜிக்கவும்தயாராக இருப்பார்கள். அவர்கள் தமிழர் விஷயத்தில் நடந்துகொள்வதில் தான் இது தங்கியிருக்கிறது.

## 'புதிய சகாப்தம் ஏற்படும்'

### அமெரிக்க ஜனதிபதி நம்பிக்கை

வாஷிங்டன், பெப். 23 தமது ஐரோப்பிய விஜயம் வல்லரசுகளுக்கிடையே புதிய சகாப்தமொன்றை

### சுற்றுலாவால் மாணவர் பயன்

## பள்ளிக் கள்ளம்பாடும் மாணவர்களுக்கு ஆபத்து

### தியேட்டர்களுக்கும் பொலிசார் வருவர்

யாழ்ப்பாணம், திங்கள் பகல் நேரங்களில் சினிமாத் தியேட்டர்களுக்கும், [illegible] கையை மேற்கொண்டுள்ளனர். நேற்று முன்தினம் நடந்த கல்லூரி அதிபர்கள்,

NOW SHOWING
REGAL at Jaffna
Daily at 10-00 a. m, 4-45, 7-00. 9-45 p. m.
[illegible] Nero- [illegible]sa Montes
in
TEXAS ADDIOS

MANOHARA
JAFFNA
Daily at 4-45, 7-00, & 9-45 p. m.
Pre Poya Poya 10-30 a. m.
Long Jeffries - [illegible]oose Greci
in
ASSIGNMENT LOST FORMULA

மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா. போயா 2-30 மணி
அசோகன் - K. R. விஜயா
நடித்த
காட்டுராணி

42வது தினம்!
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
மற்றும் பலர் நடித்த
ஒளி விளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
(எஸ். ரி. ஆர். வெளியீடு)

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் - ஜெயலலிதா
நடித்த
குடியிருந்த கோயில்

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி — சாவித்திரி
நடித்த
அன்னையின் ஆணை

இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30
ஜெய்சங்கர் - விஜயா
நடித்த
பட்டணத்தில் பூதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்க ஜனுதிபதி நம்பிக்கை

வாஷிங்டன், பெப். 23

தமது ஐரோப்பிய விஜயம் வல்லரசுகளுக்கிடையே புதிய சகாப்தமொன்றை ஏற்படுத்துமென்று அமெரிக்க ஜனுதிபதி நிக்ஸன் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய விஜயத்தை மேற்கொள்வதற்கு முன்னதாகத் தம்முடன்வரும் 200 நிபுணர்கள் மத்தியில் பேசுகையில் அவர் இப்படியாகக் குறிப்பிட்டார்.

பரஸ்பரம் விட்டுக்கொடுப்பதனுல் சுமுகமான நிலை ஏற்பட வழிபிறக்குமென்றும் திரு. நிக்ஸன் தெரிவித்தார்.

ஐரோப்பாவில் நடாத்தும் பேச்சுவார்த்தை ரஷ்யாவுடன் நடத்தப்போகும் பேச்சுவார்த்தைக்கு முன்னேடியாக அமையுமென்றும் அவர் கருத்து வெளியிட்டார்.

அமெரிக்கஜனுதிபதியைத் தொடர்ந்து 200 நிபுணர்களும் இரு ஜெட் விமானத்தில் சென்றனர்.

## சுற்றுலாவால் மாணவர் பயன்

அளவெட்டி, சனி

வசாவிளான் மத்திய மகா வித்தியாலய ஜி.சி.ஈ. விஞ்ஞான ஏ. பிரிவு மாணவர்களுடைய முதலாவது சுற்றுலா பல ஆராச்சிகள் செய்யத் தூண்டியுள்ளது.

மேற்படி வித்தியாலய விஞ்ஞான ஆசிரியர் திரு.க. குககுமாரராசா தலைமையில் சென்ற இம் மாணவர் சுற்றுலாமூலம் கிளிநொச்சி தோட்டப்பாடசாலை பரந்தன் சோடா தொழிற்சாலை படித்தவாலிபர் திட்டம் முதலியவை உட்பட விஞ்ஞானத் துறைக்குத் தேவையான பல இடங்களையும் பார்க்கக்கூடியதாக இருந்ததாம்

பல ஆராய்ச்சி வேலைகளில் ஈடுபட தம்மை இச் சுற்றுலா தூண்டியுள்ளதாக இதில் சென்ற மாணவர் தெரிவித்தனர்.

# யாழ்ப்பாணத்தில் குடிநல வாரம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆதரவில் எதிர் வரும் ஆனிமாதம் 'குடிநல வாரம்' கொண்டாடப்பட விருக்கின்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற யாழ்ப்பாணம் மாநகரசபையின்முதலாவது மாதாந்தக்கூட்டத்தில் இது ஏகமனதாக முடிவுசெய்யப் பட்டது.

வரியிறுப்பாளரின் வரிப்பணத்தில் மாநகரசபை செய்துவரும் சேவைகள், வசதிகளைப் பொறுப்புணர்வுடன் உபயோகிக்கவேண்டப்படும் குடிநலமனப்பான்மையை வரியிறுப்பாளர்களுக்கு உணர்த்தும் பொருட்டு 'குடிநலவாரம்' ஒன்று அனுட்டிப்பதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்ய வேண்டுமென திரு. நா. த. செல்வத்துரை கொண்டு வந்த பிரேரணையை திரு. அல்பிரட் துரையப்பா ஆமோதித்ததோடு இதனை எதிர்வரும் ஆனி மாதம் செய்வதென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

யாழ். நகரின் நுளம்புத் தொல்லையையும், அழுக்கு நீரின் தேக்கத்தால் ஏற்படும் துர்நாற்றத்தையும்தடுக்கும் வகையில், சேதமுற்றும் தூர்ந்துபோயும் உள்ள வடிகால்களை வேறுபாடில்லாது சகல வட்டாரங்களிலும் திருத்திப் பராமரிப்பதுடன் தேவைக்கு ஏற்ப நிதிநிலைமையைப்பொறுத்து புதிய வடிகால்களை அமைப்பதென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (கா. நி.)

## பாவிப்பற்று கிடக்கிறது

அளவெட்டி, ஞா

தபால் பெட்டி நிறுவ அதிகாரிகள் வராமையால்தபால் பெட்டிகள் காங்கேசன்துறை தபால் நிலையத்தில் பாவிப்பற்று கிடக்கின்றன.

காங்கேசன்துறையில் நிறுவுவதற்காக அரசாங்கம் அனுப்பிய இரு தபால் பெட்டிகள் 6 மாதகாலமாக உரிய இடங்களில் நிறுவப்படாமல் காங்கேசன்துறை தபால் நிலையத்தில் கிடக்கின்றன.

இது பற்றி நமது நிருபர் காங்கேசன்துறை தபால் நிலைய அதிகாரி ஒருவரிடம் விசாரித்தபோது இப் பெட்டிகளை நிறுவுவதற்காக உயர் பீடத்தில் இருந்து அதிகாரிகள் இங்கு இன்னும் வராததே இதற்குக் காரணம் எனத் தெரிவித்தார்.

இன்றும் அண்ணாவைப்பற்றி கண்கலங்கியே பேசுகின்றனர். இதற்கு அங்குள்ள அரசியல் நோக்கம் தான் காரணம் என்று சிலர் சொல்லலாம்.

## அயூப் உதாரணம்

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையில் கடுமையான யுத்தம் நடந்து இரு தரப்பினருக்கும்பலத்த உயிர்ச்சேதமும், பொருட்சேதமும் ஏற்பட்டது. இரு நாட்டுத் தலைவர்களும் ஒருவர் மீது ஒருவர் கடுமையான வார்த்தைகளால் தாக்குதல் நடத்தினர். தாஷ்காண்டில் ரஷ்யப்பிரதமரின் முயற்சியால் பிரகடனத்தில் கைச்சாத்திட்டபின் அன்றிரவு இந்தியப் பிரதமர் திரு. லால்பதூர் சாஸ்த்திரி திடீரெனக் காலமானுர். அவரின் பூதவுடலை விமானத்தில் ஏற்றுவதற்கு சுமந்து சென்றவர்களில் முதலில் நின்றவர் பீல்ட்மார்ஷல் அயூப்கான். அதுமட்டுமல்ல பூதவுடல் சென்ற விமானம் பாகிஸ்தானுக்கு மேலாகப் பறந்து செல்வதற்கும் உடனடியாக அனுமதி வழங்கியவர் அயூப்கான். அங்கே பகைமை மறந்து; பண்பு உயர்ந்தது.

தமிழ் நாட்டுடன் நல்லுறவையும் தமிழக மக்களின் நட்புறவையும் வலுப்படுத்திக் கொள்ளக்கூடிய ஒரு நல்ல சந்தர்ப்பத்தை இலங்கை இழந்துவிட்டது.

ஆர். ஜி. சேனநாயகா அண்ணுவுக்கு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றும் யோசனையை வன்மையாக எதிர்த்தார். எதிர்கட்சியினரும் மற்றும் தேசியப் பத்திரிகைகள் சில உட்பட அரசியல் கட்சிகள், கட்சிப் பத்திரிகைகளும் திராவிட முன்னேற்றக் கழகம் பற்றியும் இங்கும், தமிழ் நாட்டிலும் கூட இப்போது இல்லாததுமான 'நாம் தமிழர்' இயக்கம் பற்றியும் தவருன கருத்துக்களை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி வந்துள்ளன. இன்று இந்தப் பிரசாரத்தை தீவிரப்படுத்தியிருக்கின்றன. இதற்கு இங்கு விரைவில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலும் ஆட்சி பீடத்தில் அமர்வதற்கான அதிகாரப் போட்டியுமே முக்கிய காரணமாக இருக்கலாம்.

## தி. மு. க. பூச்சாண்டி

தி.மு.க. பற்றிய தவருன பிரசாரத்தை நீக்கவும் தமிழ் நாட்டில் தி. மு. கழ

திட்டவட்டமாகத் தெரிவித்து வந்தார். அண்ணு உயிர் வாழ்ந்தால் ஒரு சமயம் நேரிலேயே இங்கு வந்து தி. மு. க. பற்றிய அச்சத்தை நீக்கவும் முனைந்திருப்பார். இங்குள்ள தமிழ் மக்களின் நல்வாழ்வுக்காகவும் அயல் நாடான இலங்கையின் நட்புறவையும் நல்லெண்ணத்தையும் பெறுவதற்காகவும் திராவிட நாடு கோரிக்கையைக் கைவிட்டது போல் 'திராவிட' என்ற பெயரையே கழகத்திலிருந்து நீக்கி வேறு பெயர் சூட்டவும் முன்வந்திருக்கக் கூடும்.

## கருணுநிதி அறிக்கை

சென்ற வாரம் அண்ணுவுக்காக கண்ணீர் விடக்கூட இங்குள்ள தமிழருக்கு உரிமை இல்லையா என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையின் இறுதியில் தி. மு. க. பற்றிய அச்சத்தையும் இங்கு செய்யப்படும்தவருன கருத்தையும் நீக்குவதற்கு தமிழகத்தின் தற்போதைய முதல் அமைச்சர் திரு. மு. கருணுநிதி தமது நிலையைத் தெளிவுபடுத்தி ஓர் அறிக்கை வெளியிட வேண்டுமென்று தெரிவித்திருந்தேன்.

திருவாரூர் உள்ளூராட்சி மன்றம் திரு. கருணுநிதிக்கு ஒரு வரவேற்பு அளித்தது. இந்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்து திரு கருணுநிதி பேசுகையில், இலங்கையில் தி. மு. க. பற்றியும் தம்மைப் பற்றியும் செய்யப்படும்தவருன பிரசாரத்தைக் குறித்தும் குறிப்பிட்டார். இங்குதான் பிள்ளையார் பிடிக்க குரங்கான கதையாக அவரது அறிக்கை அமைந்துவிட்டது.

இலங்கையில் உள்ள தி.மு. கழகம் தேசவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுமென்றே வேறு குழப்பங்களை கிளப்பிவிடும் என்றே இலங்கை அரசாங்கம் சந்தேகம் கொள்ளத்தேவையில்லை என்று திரு கருணுநிதி கூறியதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கையில உள்ள தமிழர்கள் பற்றி திரு, கருணுநிதிக்கு மட்டுமல்ல தமிழ் நாட்டிலுள்ள தலைவர்கள் பலருக்கும் சரியான விபரம் தெரியாது. இலங்கையிலுள்ள தி. மு. கழகம் தேசவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடாது என்று திரு. கருணுநிதி கூறியதன் மூலம் இந்திய தி. மு. கழகத்தின் கட்டுப்பாட்டிலும், திரு. கருணுநிதியின் கட்டுப்பாட்டிலும்

## தியேட்டர்களுக்கும் பொலிசார் வருவர்

யாழ்ப்பாணம், திங்கள்

பகல் நேரங்களில் சினிமாத் தியேட்டர்களுக்கும், கள்ளுக் கொட்டில்களுக்கும் பொலிஸார் சென்று சோதனையிடலாம். இதற்கான முன்னறிவித்தல் ஒன்று கல்லூரி அதிபர்களுக்கும், சினிமாத் தியேட்டர் உரிமையாளர்களுக்கும் வடபகுதி பொலிஸாரால் அனுப்பப்படவிருக்கிறது.

கல்லூரிகளுக்குச் செல்வதாக வீட்டில் கூறிவிட்டு, கல்லூரிக்குச் செல்லாமல், படம் பார்க்கவும், கள்ளுக் கொட்டில்களுக்கும் செல்லும் மாணவர்களைக் கண்டு பிடிக்கவே பொலிஸார் இந்த ஜரூர் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். நேற்று முன்தினம் நடந்த கல்லூரி அதிபர்கள், பொலிஸ் அதிகாரிகள் மகாநாட்டிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

எந்த மாணவனையும் பாடசாலை நாட்களில் தியேட்டர்களுக்குள் அனுமதிக்கக் கூடாதென முதலில் தியேட்டர் உரிமையாளர்கள் பொலிஸாரால் வேண்டிக் கொள்ளப்படுவார்.

இந்த ஒழுங்கை மீறி நடக்கும் மாணவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படலாமெனவும் உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (கா. நி)

## 'சாரணியத்தின் மகத்துவம்'
### பேடன்பவுல் விழாவில் பேச்சு

யாழ்ப்பாணம், திங்கள்

"சாரணீயத்தில் தொடர்பு கொண்டு சேவையாற்றும் மக்கள் பலர் அநேக கஷ்டங்களுக்கிடையே தொண்டாற்றி வருவது போற்றத் தக்கதேயாகும். அரசாங்கமும், பொதுமக்களும் இச் சித்தாந்தத்தை நன்குணர்ந்து, சாரணீயத்திற்கு ஆதரவு அளிப்பார்களானுல் சாரணீயம் நன்கு வளரும்."

இவ்வாறு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற லோர்ட் பேடன் பவுல் நினைவு தினத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் திரு. ஐ. எம். இஸ்மாயில் குறிப்பிட்டார்.

வட பகுதி சாரண இயக்க கமிஷனர் திரு. கே. ஜி. அரசரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் பல பாடசாலைகள் கலந்து கொண்டன. திரு. இஸ்மாயில் தொடர்ந்து பேசுகையில், சர்வோதய இயக்கமான சாரணீயம் ஒரு சர்வோதய இயக்கமாகவும் அமைந்திருக்கின்றது. உடல் உழைப்பால் மனதைப் பக்குவப் படுத்தி சாதி, சமய இன வேறுபாடுகளைத் தவிர்த்து நம் பெரியார்கள் கனவு கண்ட ஒருமைப் பாட்டை அது காண்பிக்கின்றது என்று குறிப்பிட்டார்.

திரு. கே. ஜி. அரசரத்தினம் பேசுகையில் உடலால், உள்ளத்தால், உணர்ச்சியால் சிறுமிகளை ஒருமுகப் படுத்தி கடமை, கண்ணியம், கட்டுப்பாடு சகோதரத்துவம், நட்பு, சுத்தம், கீழ்ப்படிதல், நேர்மை ஆகிய குணங்களின் அடிப்படையில் அவர்களைப் பண்புள்ள நன்மக்களாகப் பயிற்சியளிக்கும் இயக்கமென்றுல், அது லோர்ட் பேடன் பவல் ஆரப்பித்து வைத்த சாரணீய இயக்கமே என்று கூறினுர்.

செல்வி ஏச். ஆர். தோமஸ், திரு. ஆர். சி. எஸ். குக் ஆகியோர் உரையாற்றினர். (ந. நி)

### தேவை

அலுமினியம் தொழிற்சாலையில் வேலைபார்த்து அனுபவமுள்ள ஸ்பின்னர்களும் பொலிசர்களும் தேவை. முழுவிபரங்களுடன் கீழ்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். யாழ் உலோகத் தொழிற்சாலை, 250-254, K. K. S. ரேட், யாழ்ப்பாணட.

696

### நன்றி நவிலல்

திருமதி அமிர்தலிங்கமும் அவரது குடும்பத்தினரும் காலஞ்சென்ற திரு. அமிர்தலிங்கத்தின் கடைசி நேரத்தில் உதவி புரிந்த டாக்டர்மார்களுக்கும் ஈமக் கிரியைகளில் கலந்து உதவி புரிந்தும் அனுதாபச் செய்திகள் அனுப்பிய உற்ருர் உறவினர்களுக்கும் தமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்ருர்கள்.

திருமதி இரத்தினம் அமிர்தலிங்கமும் குடும்பத்தினரும் காங்கேசன்துறைவீதி, இணுவில். 697


பிரியோயா, ரோயா 2-30
ஜெய்சங்கர் - விஜயா
நடித்த
பட்டணத்தில் பூதம்

தேவை

புளியங்கூடல், வேலணை, சரவணை, நாரந்தனை, சுருவில் ஆகிய கிராமங்களில் வீடுகள் தோறும் சென்று 'ஈழநாடு' பத்திரிகை விற்பனை செய்வதற்கு இளைஞர்கள் தேவை. சைக்கிள் வைத்திருப்பவர்கள் விரும்பத்தக்கது. நேரில் வரவும். விநியோக மனேஜர், ஈழநாடு, யாழ்ப்பாணம்.

1194

இங்ஸ்லி





பிளாஸா வெம்பிளி (கண்டி)
ஸ்ரீகிருஷ்ணு (திருமலை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
மற்றும் சினிமாஸ்திரைகளில்

சிவாஜிகணேசன்
கே.ஆர். விஜயா
முத்துராமன்,
எல். விஜயலக்ஷ்மி,
நாகேஷ், குமாரிரச்சு
இன்னும் பலர் நடித்த
ஸ்ரீதரின் மகோன்னத
ஈஸ்ட்மென்
கலர்ப் படைப்பு





ஊட்டிவரை உறவு
இசை: விஸ்வநாதன் பாடல்கள்: கவிஞர்கண்ணதாசன்

அத்துடன் காண்பிக்கப்படுகிறது யாழ் வெலிங்டன் திரையில்

மு. கருணுநிதியின் விமர்சனத்துடன்
S. S. வாசன்
அவர்களால்
ஈஸ்மன்கலரில்படமாக்கப்பட்டு சென்னையில் நடைபெற்ற
இரண்டாவது அனைத்துலக தமிழ் ஆராய்ச்சிமகாநாட்டு கோலாகல காட்சியையும்
மற்றும்
மக்கள் திலகம் எம். ஜி. ஆர். - அறிஞர் அண்ணு ஆகியோர் இம்மகாநாட்டில் சொற்பொழிவாற்றுவதையும் பார்க்கலாம்!





இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்1969-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 24-ந்திகதிஅச்சிட்டுவெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org